# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 47 — 1973 පෙබරවාරි 15 වැනි බ්‍රහස්පතින්දා — 1973.02.15

47 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. | 155 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 170 |


## பதவிகள் — வெற்றிடம்

"ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நான் விதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அல்லது மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவிபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவரென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்;

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

### முக்கிய அறிவித்தல்

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், நியமிக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

## பொது முகாமையாளர் பதவிகள், மின்தறித்திட்டம், சிறுகைத்தொழிற்றிணைக்களம்

சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் மின்தறித் திட்டங்களிற் பொது முகாமையாளர் பதவிகட்கு ஸ்ரீலங்கா (இலங்கை) க் குடிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணப்படும் மாதிரிப் படிவத்தின் உள்ளடக்கத்தைக் கொண்டமைந்த படிவங்களிலான விண்ணப்பங்கள் அ. அ. பெட்டி 570, கொழும்பு 2 எனும் முகவரியிலுள்ள கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளரை 1973, மார்ச் மாதம் 15 ந் தேதியன்றோ அதன் முன்போ சென்றடைதல் வேண்டும். விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொது முகாமையாளர் பதவிகள், மின்தறித் திட்டம்" எனக் குறிக்கப்பட வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(அ) பதவிகள் நிரந்தரமானவை. தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர் அரசாங்க சேவைச் சகாயநிதிக்குதவுமாறு வேண்டப்படுவார்.

(ஆ) தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர் பதவியிலுறுதிப்படுத்தப் படுமுன், பின்வரும் பாடங்களைக் கொண்ட பரீட்சையொன்றிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவார் :—

(1) சிங்கள மொழி

(2) நிதிப்பிரமாணங்கள்

(3) தாபனச்சட்டக்கோவைப் பிரமாணங்கள்

(1) ற் கெதிரே குறிக்கப்பட்டுள்ள பாடத்திற்கான பரீட்சை கனிட்ட தராதரப் பத்திர மட்டத்திலமையும்.

(2) ற் கெதிரே குறிக்கப்பட்டுள்ள பாடத்திற்கான பரீட்சை இ. நி. சே. உத்தியோகத்தர்கட்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையின் மட்டத்தில்மையும்.

(3) ற் கெதிரே குறிக்கப்பட்டுள்ள பாடத்திற்கான பரீட்சை மேற்கூறிப்பட்ட உத்தியோகத்தர்கட்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையின் மட்டத்திலமையும்.

தெரிந்தெடுக்கப்படும் வேட்பாளர் ரூபா 11,520/- க்கு முன்னுள்ள வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையிற் தகுதியடையத் தமிழில் ஓர் பரீட்சையிற் சித்தியெய்தும்படி வேண்டப்படுவார். இப்பரீட்சை இ. நி. சே. உத்தியோகத்தரின் இரண்டாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையின் மட்டத்திலமையும்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :—

ஆண்டொன்றுக்கு ரூபா 6,720 விருந்து ஆண்டொன்றுக்கு ரூபா 360/- ஐக் கொண்ட 12 சம்பள ஏற்றங்களையும், ரூபா 480/- ஐக் கொண்ட 7 சம்பள ஏற்றங்களையும் கொண்டு ரூபா 14,400 வரை உயரும்.

(வினைத்திறமை காண் தடை ரூபா 11,520/- க்கு முன்)

4. வேண்டப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு வேட்பாளரும், தான்—

(அ) மிகச் சிறந்த குணமும், உடனலமும் உள்ளவரெனவும்.

(ஆ) 1973, மார்ச் மாதம் 15 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறைந்தவரல்லரெனவும், 40 வயதுக்கு மேற்பட்டவரல்லரெனவும். (இவ்வயதெல்லை ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ளோர்க்கு ஏற்புடைத்தன்று)

(இ) நேரடியாகச் சேர்பவர்கட்கு.—அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விஞ்ஞான, பொருளாதாரவியல், அல்லது வர்த்தகப்பட்டம் பெற்றவரெனவும்,

(ஈ) திணைக்கள வேலையாளர்கட்கு

(1) சிறுகைத்தொழிற்றிணைக்களத்தில் ஓர் உத்தியோகத்தராயிருப்பதுடன் வயதெல்லையில்லாது, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றைப் பெற்றுள்ளாரெனவும்;

(2) நெசவு வேலைப் பொறுப்பு உத்தியோகத்தர் பதவியில் 7 வருட அனுபவமும் அல்லது வேலை முகாமையாளர் பதவியில் குறைந்தது 18 வருட அனுபவமுமுள்ளவரெனவும் திருப்திகரமான சான்று சமர்ப்பித்தல் வேண்டும்.

1 ஆம் 2 ஆம் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் க. பொ. த. (சாதாரணப்) பரீட்சையிற் கணிதத்திலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

குறிப்பு

(1) நெசவில் அனுபவமுள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(2) திணைக்களத்திலுள்ள சிரேட்ட நெசவு வேலைப்பொறுப்பு உத்தியோகத்தர்களிடமிருந்தும், வேலை முகாமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. வேண்டிய நேரத்திற் பின்வரும் ஆவணங்கள் முழுவதையுமோ அன்றி அவற்றிலெதையாவதோ சமர்ப்பிக்கும்படி வேட்பாளர்கள் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச் சான்றிதழ் (கவனிக்கவும்.—ஞானதீட்சைச் சான்றிதழ்களோ அன்றி உதவி பெறும் பாடசாலைகளின் சட்டக் கோவையின் நோக்கத்திற் கிணங்க வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிகவுயர்ந்த கல்விச் சான்றிதழ்

(இ) இரு குணநலச்சான்றிதழ்கள்

(ஈ) தொழில் முறை அல்லது தொழிநுட்பத் தகைமை அல்லது இவ்விரண்டுக்கு முரிய சான்றிதழ்கள்

(உ) சிங்களத்திற் சித்தியெய்திய மிகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) விண்ணப்பத்துடன் ஆவணங்களோ, ஆவணங்களின் படிகளோ இணைக்கப்படலாகா.

(2) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்பிக்கத் தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனத்திற்கெடுக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்கள் தத்தந் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான மற்றேதாவது ஆவணங்களும் கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கல்லால், இவ்வமைச்சிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கும் முகவரியிடப்படக்கூடாது.

8. அரச வர்த்தமானியின் பகுதி I, தொகுதி II ன் முற் பகுதியிற் பிரசுரிக்கப்பட்டுள்ள, அரசாங்க சேவை நியமனங்கட்கு ஏற்புடையவையான பொது நிபந்தனைகட்குத் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

எம். சிவநாதன்,
செயலாளர்,
கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு.

48, ஸ்ரீ ஜினரத்ன வீதி,
அ. அ. பெட்டி 570,
கொழும்பு 2, 1973, மார்ச் மீ 30 ந் உ.

### மின்தறித் திட்டத்திலுள்ள பொதுமுகாமையாளர் பதவிகட்கான விண்ணப்பப் படிவம்

(கவனிக்கவும்.—விண்ணப்பத்தைத் தாங்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் "மின்தறித் திட்டத்திலுள்ள பொது முகாமையாளர் பதவிகட்கான விண்ணப்பம்" எனக் குறிக்கப்படுவதுடன், அது கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் செயலாளரின் முகவரியிடப்பட்டும் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.)

1. முழுப் பெயர் :————.

2. முகவரி :————.

3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புப் பதிவுச் சான்றிதழின்படி இணைக்கப்பட வேண்டும்)

4. நாட்டினம் :————.

5. மணமானவரா, தனியாளா ? :————.

6. கல்வித் தகைமை அல்லது தொழினுட்பத் தகைமை அல்லது இவ்விரண்டும் :————.
(சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்பட வேண்டும்)

7. கல்விக் கூடத்தை விட்டு விலகியதிலிருந்து பெற்ற தொழில் அல்லது பயிற்சி அல்லது இவ்விரண்டுக்குமுரிய விபரங்கள் :————.

8. இதன் முன் அரசாங்க திணைக்களமொன்றிலோ, அரசாங்கக் கூட்டுத்தாபனமொன்றிலோ தொழிலாற்றியிருப்பின் அதைவிட்டு விலகிய காரணத்தைக் கூறவும் :————.

9. எப்பொழுதாவது நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின் அத்தவறையும் தண்டனையையும் பற்றிய விபரங்களைத் தருக :————.

10. குணச்சான்றிதழ்கள் பெற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட மூவரின் பெயர்களும், பதவிப் பெயர்களும் :————.

————,
கையொப்பம்.

திகதி :————.

2-509—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### உதவிப் பணிப்பாளர் (பொது மீன் காட்சிச்சாலையும் ஆராய்ச்சியும்) பதவி—இலங்கைத் தேசிய விலங்கினக் காட்சிச்சாலை

இலங்கைத் தேசிய விலங்கினக் காட்சிச் சாலை உதவிப் பணிப்பாளர் (பொது மீன் காட்சிச்சாலையும் ஆராய்ச்சியும்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுத்துள்ள மாதிரிப் படிவத்தில் பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டிய விண்ணப்பங்கள் 1973 மார்ச் மாதம் 6 ஆம் திகதியிலோ அதன் முன்னரோ செயலாளர், கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சு, 54, சதாம் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்தில் கிடைத்தல் வேண்டும்.

அஞ்சலுறையின் இடப்பக்க மேன் மூலையில் "உதவிப் பணிப்பாளர் (பொது மீன் காட்சிச் சாலையும் ஆராய்ச்சியும்) பதவி" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

2. நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்

(அ) பதவி நிரந்தரமானது, பொதுச் சேவைச் சகாயநிதிக்குத் தொகை உதவ வேண்டியது.

(ஆ) தெரிவுபெற்ற ஆள், குடிமனை ஏற்படுத்தப்பட்டால்/ஏற்படுத்தப்படும் பொழுது காட்சிச்சாலையில் வதிய வேண்டும்; எந்த நேரத்திலும் கடமையாற்ற அவர் கிடைக்கக் கூடியதாயுமிருத்தல் வேண்டும். நிதிப் பிரமாணங்களுக்கு அமைய அவர் குடிமனைக்கு வாடகை செலுத்த வேண்டும்.

3. சம்பள அளவுத் திட்டம்.—பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத் திட்டம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,720 இல் ஆரம்பித்து ரூபா 360 இல் 12 உம் ரூபா 480 இல் 5 உம் ஆக ஆண்டொன்றுக்கு ரூபா 13,440 வரை உயரும். ரூபா 11,040 க்கு முன்னர் வினைத் திறமைகாண் தடையுண்டு. (69.10.01 க்கு முன்னர் இதனோடு ஒத்திசைவான அடிப்படைச் சம்பளம் ரூபா 4,080—12×360 உம் 5×480—10,800 உம் ஆகும்.)

4. கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம்—

(அ) உயர்ந்த குணசீலம் உடையவர் என்றும் சிறந்த உடற்றகுதி கொண்டவர் என்றும்;

(ஆ) 1973 மார்ச் 6 ஆம் திகதியில் 22 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்குக் கூடாமலும் உள்ளவர் என்றும்; (பொதுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதின் உயர் எல்லை பொருந்தாது.)

(இ) (i) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில் கடலுயிரினவியலை ஒரு சிறப்புப் பாடமாகவும் இரசாயனவியலைத் துணை பாடமாகவும் கொண்ட ஒரு விலங்கியற் பட்டதாரி என்றும்;

அல்லது

(ii) உயிரியல், விலங்கியல், இரசாயனவியல் பாடங்களுடன் (முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புப்) பொதுப் பட்டம் பெற்றவர் என்றும்;

நிறுவுதல் வேண்டும்.

கவனிக்க.—பொது நிருவாகத்தில் அனுபவமும் நிறுவுதிறனும், வெளிக்களக் கடமைகளில் ஓர் உளச்சார்பும் கடல்நீர் நன்னீர் மீன் இன அறிவுடன் ஆராய்ச்சி வேலையில் கரிசனையும் கொண்ட வேட்பாளர்களுக்கு மிகை நாட்டம் காண்பிக்கப்படும்.

5. (அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்,

(ஆ) மூன்று சமீபத்திய குணச்சான்றிதழ்கள், (பொதுச் சேவையிலுள்ள விண்ணப்பகாரர்களுக்குப் பொருந்தாது.)

(இ) நூற்கல்வியிலும்/தொழிற் கல்வியிலும் பெற்ற மிக உயர்ந்த தகைமைகளின் சான்றிதழ்கள்,

(ஈ) பொது நிருவாக அனுபவமும், நிறுவுதிறன் வெளிக்களக் கடமைகளிலும் ஆராய்ச்சியிலும் ஓர் உளச்சார்பு ஆகியவை தொடர்பான விபரங்களைக் கொண்ட சான்றிதழ்ப் படிகளினால் ஆதாரங் காட்டப்படும் கையொப்பமிட்ட ஒரு வாக்குமூலம்.

மேற்படி கூறியவற்றின் படிகளை விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் அணைக்க வேண்டும்.

6. பொதுச் சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், அவ்வத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும். குறித்த திகதிக்கு முன்னதாக விண்ணப்பம் திணைக்களத் தலைவரிடம் கிடைக்கப் பெற்றும், குறித்த திணைக்களத் தலைவர் தாமதத்துக்குச் செல்லுபடியான காரணங்களைக் காட்டி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்படி விதந்துரைத்தாலுமன்றிக் குறித்த திகதிக்குப் பிந்திவரும் எந்த விண்ணப்பமும் அனுசரிக்கப்படமாட்டாது.

7. விண்ணப்பங்களையோ அவற்றைச் சார்ந்த வேறெந்தத் தொடர்புகளையோ இலங்கைத் தேசிய விலங்கினக் காட்சிச்சாலைத் திணைக்களத்து அல்லது இந்த அமைச்சினது எந்தவொரு அலுவலருக்கும் ஆள்முறையில் முகவரிப்படுத்தக் கூடாது. செயலாளர், கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சு என்ற முகவரிக்கே அவற்றை அனுப்ப வேண்டும்.

இவ்வரசாங்க வர்த்தமானியின் I ஆம் பாகம் IIஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பொதுச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்துவனவான பொது நிபந்தனைகளைப் பார்த்துக்கொள்க.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

பீ. பி. கரந்தவல,
செயலாளர்,
கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சு.

கப்பற்றொழில் சுற்றுலா அமைச்சு,
54, சதாம் வீதி,
கொழும்பு 1,
1973 பெப்பிரவரி 5 ஆம் திகதி.

மாதிரிப் படிவம்

இலங்கைத் தேசிய விலங்கினக் காட்சிச்சாலையில் உதவிப் பணிப்பாளர் (பொது மீன்காட்சிச்சாலையும் ஆராய்ச்சியும்) பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.
2. முகவரி :————.
3. பிறந்த திகதியும் இடமும் :————.
(பிறப்புச் சான்றிதழ்ப் படி அணைக்க வேண்டும்.)
4. நாட்டினம் :————.
5. விவாகமானவரா இல்லையா ? :————.
6. கல்வித் தகைமைகளும்/தொழில் நுட்பத் தகைமைகளும் : ————.
(சான்றிதழ்களின் படிகள் அணைக்க வேண்டும்)
7. பாடசாலை விட்டது தொடக்கம் பார்த்த வேலையினதும்/பயிற்சியினதும் விபரங்கள் :————.
(சான்றிதழ்ப் படிகள் மூலம் ஆதாரம் காட்டுக.)
8. எந்தவொரு அரசாங்கத் திணைக்களத்தில்/பொதுக் கூட்டுத்தாபனத்தில் வேலை பார்த்திருந்தால், வேலையை விடுவதற்கான காரணம் காட்டுக :————.
9. நீதிமன்றம் ஒன்றில் என்றுவது எந்தவொரு கிரிமினல் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்டிருப்பின் அத்தகைய எந்தவொரு குற்றத்தினதும் தண்டனையினதும் விபரம் : ————.
10. குணச்சான்றிதழ்கள் கொடுத்திருக்கும் மூன்று ஆட்களுடைய பெயர்களும் பதவிப் பெயர்களும் :————.

இவ்விண்ணப்பத்தில் யான் அளித்திருக்கும் விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இதனகத்தே கொடுத்திருக்கும் எந்த விபரங்களும் பொய்யானவையும் சரியற்றவையுமெனக் கண்டு பிடிக்கப்பட்டால் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கத்துக்கும் செம்மையின்மை நியமனத்துக்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றி விலக்கப்படுதலுக்கும் ஆளாவேன் என்பதையும் யான் அறிந்துள்ளேன்.

————,
வேட்பாளரின் கையொப்பம்.

திகதி :————.

2-585—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

## சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இரசாயனவியல்) பதவி

சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களத்தில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இரசாயனவியல்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலுக்குக் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் செயலாளர் தோட்டத் தொழிற்றுறைகள் அமைச்சு, த. பெ. இல. 1652, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு, மார்ச் மாதம் 10 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு.—(i) கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. நியமன நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்.—(i) பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையற்றதுமாகும். அரசாங்க சேவை சேமலாப நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படவேண்டும். ஆரம்பகால சேவை மூன்று வருடங்களுக்கு தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் அரசாங்கத்தின் கீழ் 1972 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ந் திகதிக்கு முன்னர் நிரந்தரமானதும் உபகாரச் சம்பளத்திற்கு உரிமையுள்ள பதவியை வகித்தவராயும் இருந்தால் ஆரம்ப காலத்தில் ஒரு குறிக்கப்பட்ட காலத்திற்குப் பதில் கடமையாற்ற நியமிக்கப்படுவார்.

3. சம்பளமும் ஏனைய படிகளும்.—இப்பதவிக்குரிய சம்பளத் திட்டம் பின்வருமாறு :—

திரட்டிய சம்பளம் : வருடத்திற்கு ரூபா 7,440—10×360 ம், 11×480 உயர்வுகளைக் கொண்ட ரூபா 16,320. (ரூபா 11,520 க்கும் 14, 880 க்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு.)

குறிப்பு.—(i) பட்டதாரியான பின்னர் விதிக்கப்பட்ட பின்னிலைப் பட்டமொன்றைப் பெற்றாலன்றி எந்த உத்தியோகத்தரும் சம்பளத் திட்டத்தில் வருடம் ஒன்றுக்கு ரூபா 11,520/- சம்பள எல்லைக்கு அதிகமான சம்பளத்தைப் பெறுவதற்கு உரித்துடையவராகார்.

(ii) பட்டதாரியான பின்னர் விதிக்கப்பட்ட பின்னிலைப்பட்டமொன்றை அல்லது டிப்ளோமாவைப் பெற்றிருக்கும் உத்தியோகத்தர் வருடமொன்றுக்கு ரூபா 8,520/- சம்பள அடிப்படையைப் பெறுவார்.

4. தேவைப்படும் தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியலில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புப் பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

(ஆ) பட்டதாரியான பின்னர், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் இரசாயனவியலில் அல்லது விவசாயத்தில் பின்னிலைப் பட்டம் பெற்றவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

குறிப்பு.—கீழ் குறிப்பிட்ட அபேட்சகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் :—

(i) சித்தியெய்திய பட்டப் பரீட்சையில் தாவரவியலைத் துணைப் பாடமாகக் கொண்டு சித்தியெய்தியோர்.

(ii) விவசாயத்தில் நடைமுறைப் பயிற்சியுடையோர்.

(இ) விண்ணப்ப முடிவுத் திகதியில் 22 வயதுக்குக் குறையாதவராயும், 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். பட்டதாரியான பின்னர் பின்னிலைப்பட்டம் பெற்றோருக்கான மேல் வயதெல்லை 35 ஆகும். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளோருக்கு இவ்வயதெல்லைகள் ஏற்புடைத்தாகா).

(ஈ) நல்லொழுக்கமும் உடலுறுதியும் உடையவராயிருத்தல் வேண்டும்.

5. பின்வரும் சாதனங்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கேட்கப்படும் பொழுது சமர்ப்பிக்கும்படி விண்ணப்பதாரர் வேண்டப்படுவர் :—

(அ) பிறப்புச்சான்றிதழ் (ஞானஸ்நானச் சான்றிதழ்களோ அல்லது உதவி பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் நோக்கத்திற்கு அமைய வழங்கப்பெற்ற பிறப்புச் சான்றிதழ்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டச் சான்றிதழ் அல்லது உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) இரு நற்சான்றிதழ்கள். இவற்றுள் ஒன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற் தகைமைக்கான சான்றிதழும் அல்லது தொழில் நுட்பத் தகைமைக்கான சான்றிதழும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த உயர் தகைமைச் சான்றிதழ்கள்.

குறிப்பு.—(i) சாதனங்கள் எவையும் விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்பப்படக் கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்தாரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரசாங்க சேவையிலுள்ள அல்லது அரசாங்க யாக்கங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வத் தலைவர்களுக் கூடாக அனுப்பப்படுதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களோ அல்லது அவைசம்பந்தமாக கடிதத் தொடர்புகளோ தோட்டத் தொழில் துறைகள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமேயொழிய இவ்வமைச்சில் உள்ள எந்த உத்தியோகத்தருக்கும் தனிப்பட்ட முறையில் அனுப்புதல் கூடாது.

8. இவ்வர்த்தமானியின் I ம் பகுதி (II அ) ம் தொகுதியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

டொறிக் த சூஸா,
செயலாளர்,
தோட்டத் தொழில் துறைகள் அமைச்சு.

தோட்டத் தொழில் துறைகள் அமைச்சு அலுவலகம்,
த. பெ. இலக்கம் 1652,
6, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு பெப்புருவரி 6 ந் திகதி.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### ஆராய்ச்சி உத்தியோகத்தர் (இரசாயனவியல்) பதவிக்கான விண்ணப்பம்

### சிறு ஏற்றுமதிப் பயிர்த் திணைக்களம்

(இவ்விண்ணப்பப் படிவத்துடன் எந்தவொரு சாதனமும் இணைக்கப்படுதல் கூடாது)

1. முழுப்பெயர் (உறுப்பெழுத்தில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.
(முகவரியில் ஏற்படும் மாற்றங்கள் உடனடியாக அறிவிக்கப்படவேண்டும்)

3. (அ) பிறந்த திகதி :————.
வருடம் :————. மாதம் :————. தேதி :————.
(ஆ) விண்ணப்ப முடிவுத் தேதியில் சரியான வயது :————
வருடங்கள் :————. மாதங்கள் :————. நாட்கள் :————.

4. வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசையெனக் குறிப்பிடுக :————.
(பதிவு காரணமாக இலங்கைப் பிரசையெனின் விவரங்களைத் தருக.)

5. பிறந்த இடம் : (அ) விண்ணபதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் தந்தை வழிப்பூட்டன் :————.

6. திருமணமானவரா, தனியாளா, விதவையா அல்லது தாரமிழந்தவரா எனக் குறிப்பிடுக :————.

7. பின்வரும் பாடங்களில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :————.

(i) சிங்களம் :————.
(ii) தமிழ் :————.
(iii) ஆங்கிலம் :————.

8. 12 வயதிலிருந்து நீர் கல்விபெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள்.

| பொதுக்கல்வி | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் வரை | கல்வித் தாபனம் | தொடக்கம் வரை |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |

9. நீர் கடன் தொல்லைகள் அற்றவரா? இல்லையெனின், கடன் பொறுப்புகளின் தொகை என்ன? :————.

10. சட்ட நீதிமன்றத்தில் ஏதாவது குற்ற பாதகத்திற்குக் குற்றம் சாட்டப்பட்டுள்ளீரா? அப்படியானல் வழக்கு இலக்கத்தைக் குறிப்பிட்டு, தேதிகளோடு முழுவிபரங்களையும் தருக :————.

11. பாடசாலைக்கல்வி, உத்தியோகக்கல்வி, நுண்தொழிற்கல்வித் தகைமைகள் :————.

(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள், உத்தியோகக் கல்வி/நுண்தொழிற் கல்வித் தகைமைகள், விசேட வகுப்புப் பட்டங்களாயின் அவற்றின் விபரங்கள், தோற்றிய பாடங்கள், நிறுவனங்களின் பெயர்கள் என்பவற்றைத் தேதிகளுடன் தருக.)

12. தற்போதைய தொழிலும், முன்னர் பதவிகளில் இருந்தால், அவற்றின் விபரங்களும் :————.

| பதவி | தொடக்கம்/வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|
| (1) | | |
| (2) | | |
| (3) | | |

(அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் மேலேயுள்ள 13 ஆம் நிரப்புப் பிரிவிற் குறிப்பிடப்படவேண்டும்)

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. உம்மைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய உமக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவையென்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப் படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, அல்லது சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

தேதி : ————.

(அபேட்சகர் அரசாங்க சேவையில் இருப்பவரெனில் அப்பகுதித் தலைவரின் அறிக்கை.)

————,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

தேதி :————.

2-605—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### விலங்கினக் காட்சிச்சாலைத் திணைக்களம்

### வழிகாட்டு விரிவுரையாளர் பதவி

வேண்டிய தகைமைகளுடைய ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விலங்கினக் காட்சிச்சாலையில் வழிகாட்டு விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே விதித்துள்ள படிவத்தில் இருக்க வேண்டிய விண்ணப்பங்கள் பதிவு அஞ்சலில் 1973 மார்ச்சு 15 ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகக் கீழே கையொப்பமிட்டிருப்பவருக்கு முகவரியிடப்படல் வேண்டும்.

2. சம்பள அளவுத்திட்டம் :

பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் வருடமொன்றுக்கு ரூபா 3,000—90 × 24—ரூபா 5,160 ஆகும்.

கவனிக்க : திரட்டிய சம்பள அளவுத்திட்டத்துக்கு முன்னர் 69.10.01 இல் இருந்தவாறான தொடக்கச் சம்பள அளவுத்திட்டம் ரூபா 960—72—ரூபா 2,688 ஆகும்.

3. கல்வித் தகைமைகள்—

i. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில்/க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்தது ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இவ்விரண்டுள் எந்தப் பரீட்சையிலும் விண்ணப்பகாரர் எண்கணிதம், ஆரம்ப கணிதம், சிங்களம்/தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியும் உயிரியல், புவியியல் ஆகியவற்றில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். பாடசாலைப் பேச்சுப் போட்டிகளிலோ இலக்கிய விவாதங்களிலோ விண்ணப்பக்காரர் பங்குபற்றியமை பற்றியும் குறிப்பிடலாம்.

ii. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சரளமாக உரையாடக் கூடியவராயிருத்தல் வேண்டும்.

கவனிக்க : படிப்பித்தலிலும்/அல்லது பத்திரிகைத் தொழிலிலும் அனுபவமிருப்பின் மேலதிகத் தகைமையாக அமையும்.

4. வயது :

1973.03.15 இல் வயது 20 க்குக் குறையாமலும் 30 க்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும். (அரசாங்கத் திணைக்களங்களிலும், பொதுக் கூட்டுத் தாபனங்களிலும் சபைகளிலுமுள்ள விண்ணப்பகாரருக்கு உயர்ந்த வயதெல்லை பொருந்தாது)

5. விண்ணப்பகாரர் உன்னத குணசீலராயும் திடகாத்திரமான உடலுடையவராயும் இருத்தல் வேண்டும்.

6. பொதுச் சேவையிலிருக்கும் அலுவலர்களது விண்ணப்பங்கள் அவரவர் திணைக்களத்தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும். குறித்த திகதியில் அல்லது அதற்கு முன்னதாக விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவரிடம் கிடைக்கப் பெற்றும், குறித்த திணைக்களத் தலைவர் தாமதத்துக்குச் செல்லுபடியான காரணங்களின் அடிப்படையில் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்படி விதந்துரைத்தாலுமன்றிக் குறித்த திகதிக்குப் பிந்தி இவ்வலுவலகத்தில் கிடைக்கும் அத்தகைய விண்ணப்பங்கள் அனுசரிக்கப்படமாட்டா.

7. பின்வரும் ஆவணங்களின் படிகளை விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் அணைக்கவேண்டும் :—

(அ) கல்வியில் பெற்ற மிக உயர்ந்த தகைமைகளின் சான்றிதழ்.

(ஆ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்.

(இ) குணம், நியமனத்திற்குத் தோதுடைமை என்பவை தொடர்பான இரண்டு சமீபத்திய நற்சான்றிதழ்கள். (இப்படிகள் திரும்பிவரா.)

8. விண்ணப்பங்களையோ அவற்றோடு தொடர்புடைய வேறெந்தத் தொடர்புகளையோ இத்திணைக்களத்திலுள்ள எந்த அலுவலருக்கும் ஆள் முறையில் முகவரியிடக்கூடாது. பணிப்பாளர், விலங்கினக் காட்சிச்சாலை என்றே அவை முகவரியிடப்படல்வேண்டும்.

9. இப்பதவி நிரந்தரமானது ; ஆனால் உபகாரச் சம்பளமற்றது. தெரிவு பெற்ற வேட்பாளர் தமது மொத்தச் சம்பளத்தில் 6% ஐ பொதுச்சேவைச் சகாயநிதிக்குக் கொடுக்க வேண்டும் ; அரசாங்கம் கொடுப்பது 9% ஆக இருக்கும்.

10. இவ்வரசாங்க வர்த்தமானி அறிவித்தலின் I ஆம் பாகம் (II அ) பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் பொதுச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்துவனவுமான பொது நிபந்தனைகளைப் பார்த்துக்கொள்க.

டபிள்யு. எல். ஈ. டி அல்விஸ்,
பணிப்பாளர்,
விலங்கினக் காட்சிச்சாலை.

விலங்கினக் காட்சிச்சாலைத் திணைக்களம்,
அநகாரிக தர்மபால மாவத்த,
தெகிவலை,
1973.02.07.

### தெகிவலையிலுள்ள விலங்கினக் காட்சிச்சாலைத் திணைக்களத்து வழிகாட்டு விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் :————.

2. நிலையான முகவரி :————.

3. (அ) பிறந்த திகதி :————.

(ஆ) 73.03.15 இல் வயது :————.

4. நாட்டினம் (வம்சாவழி மூலமா பதிவு மூலமா இலங்கையர்) :————.

5. கல்வித் தகைமைகள் :————.

6. உயர் தொழிற் தகைமைகள் :————.

7. குணச்சான்றிதழ், உயர்தொழிற் சான்றிதழ் கொடுத்திருக்கும் ஆட்களின் பெயர்களும், விபரங்களும் :————.

8. வேறேதும் விபரங்களிருப்பின் :————.

இவ்விண்ணப்பத்தில் யான் அளித்திருக்கும் விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் இதனகத்தே கொடுக்கப்பட்டிருக்கும் எந்த விபரங்களும் பொய்யானவை எனவோ செம்மையில்லாதவை எனவோ, கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கத்துக்கும், செம்மையின்மை நியமனத்துக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நட்ட ஈடின்றி நிறுத்தப்படுதலுக்கும் ஆளாவேன் என்பதை முற்றாக யான் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-584—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### இரத்தினபுரி மாவட்டத்தில் கிரிஎல்ல பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் குருவிட்டி கோரளை பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி

கிரிஎல்ல பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளரின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும் பொலிஸ் ஸ்தானம் சன சமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவு தாபன நிலையங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு மார்ச் மீ 15 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எஸ். ஜீ. சமரசிங்க,
பெரும் பகுதி பதிவுகாரர்.

இரத்தினபுரி மாவட்டம்,
பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 01 ம் திகதி.

2-487—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### தெப்பத் தலைவர் பதவி

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவில் தெப்பத் தலைவர் பதவிக்கென விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயாரித்து 1973.03.08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இவ்வலுவலகத்தில் கிடைக்கும்படியாக அனுப்புதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்கான சம்பள அளவுத் திட்டம் : வருடமொன்றுக்கு ரூபா 4,296—144—ரூபா 5,880 ஆகும். மேற்கூறிய சம்பள அளவுத்திட்டத்தில் தகுந்த ஒரு படியில் தேர்ந்தெடுக்கப்பட்டவரின் சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

3. **நியமன விதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—பதவி நிரந்தரமானது ; சகாய நிதி அடிப்படையில் நியமனம் அமைவதோடு மூன்று வருட காலத்திற்குத் தகுதிகாண் நிலையிலும் நியமனம் அமையும். ஆயின் 1971.12.31 இல் அன்று நிரந்தர ஓய்வூதியமுடைய பதவியை வகிக்கும் அரச சேவை அலுவலர் ஒருவர் தெரியப்படின் முதற்கண் ஒருவருட காலத்துக்குப் பதில் நியமன அடிப்படையில் அவர் நியமிக்கப்படுவர்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமைகளையுடையவர் என்பதற்குத் திருத்திகரமான சான்று காட்டுதல் வேண்டும் :—

(1) விண்ணப்பங்களை ஏற்பதற்கான கடைசித் திகதியன்று விண்ணப்பகாரரின் வயது 25 வருடங்களுக்கும், 45 வருடங்களுக்கும் இடையில் இருத்தல் வேண்டும்.

(2) கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிலாவது சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

(3) கடலோரத்தொழில் துணைத் தலைவருக்கான அல்லது தலைவருக்கான சான்றிதழை உடையவராக இருத்தல் வேண்டும். துணைத் தலைவர்களின் பரீட்சைக்குத் தோற்றவென விண்ணப்பித்தவர்களிடமிருந்தும் இப் பதவிக்கென விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். அப்படிப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சையின்போது துணைத் தலைவருக்கான சான்றிதழை உடையவர்களாக இருத்தல் வேண்டும். 1,500 தொன் எடைக்குக் குறைவான கொள்ளளவுள்ள கரையோரப் பாதை கப்பல்களின் துணைத் தலைவர்களுக்கான தகுதிகாண் சான்றிதழ்ப் பரீட்சை பற்றிய விதிகளை "மாஸ்டர் அற்றென்டன், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு 1" என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

மூ. கு. குடித்துறை எந்திரவியல் சம்பந்தமான, விசேடமாக கடற்கரை வேலை சம்பந்தமான நிர்மாண, பராமரிப்பு, வேலைகள் பற்றிய அறிவு இருப்பது மேலதிகத் தகைமையெனக் கருதப்படும்.

5. **பதவியின் கடமைகள்.**—

(அ) கடற்கரைப் பிரிவிலுள்ள எல்லா மிதப்புக் கலங்களையும் பேணுதல் பங்கிடுதல், கட்டுப்படுத்தல்.

(ஆ) துறை மேடையில் எல்லா மரக் கலங்களிலும் சுமைகள் ஏற்றுவதைக் கட்டுப்படுத்துதல்.

(இ) "சின்கர்" இரக சிறு மரக்கல நங்கூர சாதனங்களைப் பராமரித்தல்.

(ஈ) வேறேதும் கடமைகள்—அவரிடம் ஒப்படைக்கப்பட்ட சேறுவாரும் (கல்வு சேறுவாரி) வேலைகளை மேற்பார்வை செய்தல் போன்ற கடமைகள்.

6. விண்ணப்பங்கள் அல்லது இப்பதவி தொடர்பான வேறேதும் கடிதத் தொடர்புகள் "கப்பற்றுறை ஆணையாளர், கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு, கொழும்பு 1" என்ற முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அவைகளை இத்திணைக்களத்து வேறெந்த உத்தியோகத்தருக்கும் அவரின் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. விண்ணப்பகாரர் இப்பதவிக்குத் தகுதிவாய்ந்தவர்களா என்பது பற்றியும், அவர்களின் பண்பு பற்றியும் அண்மையில் அவர்கள் பெற்ற நற்சான்றிதழ்களில் குறைந்தபட்சம் மூன்று நற்சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பகாரர் தங்கள் விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதற்கான அறிவித்தல் கொடுக்கப்படமாட்டா.

9. இவ்வர்த்தமானியின் I ஆம் பகுதி, (IIஆ) ஆம் தொகுதி தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகண்ப் பார்வையிடுக.

எல். யே. வீரரத்ன,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1973.02.06.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

### தெப்பத் தலைவர் பதவி

1. முழுப் பெயர் :————.
2. அஞ்சல் முகவரி :————.
3. பிறந்த திகதி :————.
4. மிகக் கூடுதலாகப் பெற்ற கல்வித் தகைமைகள் :————.
5. கடலோரத் தொழில் துணைத் தலைவருக்கான அல்லது தலைவருக்கான சான்றிதழ் உண்டா ? :————.
6. குடித்துறை எந்திரவியல் சம்பந்தமான நிர்மாண வேலையிலும், கடற்கரை வேலை பராமரிப்பிலும் அறிவும், அனுபவமும் இருந்தால் விபரம் தருக :————.
7. நற்சான்றிதழ்கள் தந்தவர்களின் பெயர்களும், பதவிகளும் : ————.
8. வேறேதும் உரிமைக் கோரிக்கைகள் இருப்பின் விபரம் தருக : ————.
9. பின்வரும் சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன : ————.
   (அ) பிறப்புச் சான்றிதழ் :————.
   (ஆ) மிகக் கூடுதலாகப்பெற்ற கல்வித் தகைமைக்கான சான்றிதழ்கள் :————.
   (இ) கடலோரத் தொழில் துணைத் தலைவருக்கான அல்லது தலைவருக்கான சான்றிதழ் :————.
   (ஈ) மூன்று நற்சான்றிதழ்கள் :————.

மேலே தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-608—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### ஆயுள்வேத திணைக்களம்

### வைத்திய உத்தியோகத்தர் பதவிகள் (சாதாரணம்)
### ஆயுள்வேத வைத்தியசாலைகள்

12.01.73 இன் 42 ஆம் இலக்க (இலங்கை) ஸ்ரீ லங்கா குடியரசின் வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஆ) இல் வெளியிடப்பட்ட 1972 டிசெம்பர் 27 ஆந் தேதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த மேற்படி பதவிகளின் விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் தேதி 1973 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 26 தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளின் கவனத்துக்காக இத்தால் அறிவிக்கப்படுகிறது.

டபிள்யு. பி. வெவேகம,
ஆயுள்வேத ஆணையாளர்.

ஆயுள்வேத திணைக்களம்,
325, கொட்டா ரோட்,
கொழும்பு,
1.2.1973.

2-545—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

## கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்

### பதவி வெற்றிடங்கள்

நிறுவகத்திலுள்ள பின்வரும் பதவிகளுக்கு, இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம், இந்நிறுவனத்தில் பெறத்தகு படிவத்தில் அமைவதாய், ஏற்புடைய சாதனங்களுடன் பதிவுறையில் 1973.03.06 தேதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக, பணிப்பாளர், கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம், 33, எலிபாங்கு வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**1. உதவிப் பதிவாளர் (நிதி) :**

தகுதி : வேட்பாளர் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்து இடைநிலைப் பரீட்சையில் தேர்ச்சிபெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது, ஆகுசெலவு, கட்டுவேலைக் கணக்காளர் நிறுவனத்து I, II, III ம் பாகங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். பரீட்சைத் தகைமைகள் பெற்றதையடுத்து விண்ணப்பகாரர், ஆகக்குறைந்தது ஒருவருட அனுபவமேனும் பெற்றிருத்தல் வேண்டும் ; அல்லது, அரசாங்க சேவையில் IV ஆம் வகுப்புக் கணக்காளராய் அரசாங்க/யாக்கக் கணக்கீட்டில் ஆகக்குறைந்தது ஒரு வருட அனுபவமும் உடனியன்றவராயிருத்தல் வேண்டும் ; அல்லது,

அரசாங்க எழுநர் சேவை சார்ந்த மேல்நிலைத்தர அல்லது I வகுப்பு உத்தியோகத்தராய், ஆகக்குறைந்தது 10 வருட அனுபவத்துடன் தொழினுட்பக் கல்லூரி வழங்கிய கணக்கியல் டிப்புளோமாப் பட்டமோ இன்ன பிற தகைமையோ பெற்று உள்ளவராயிருத்தல் வேண்டும்.

வேதனம் : சகலமுமுட்பட, மாதமொன்றுக்கு ரூ. 650/—10×30—5×45—ரூ. 1,175 முன்னே சுட்டியதினுமுயர்ந்த தகைமையும் அனுபவமுள்ள வேட்பாளர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில். அவர் தம் தகுதிக்கேற்ற வேதன நிலையில் நியமனமளிக்கப் பெறலாம்.

வயது.—1973.03.06 ஆம் நாளில் 25 வயதுக்குட்படாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளார்க்கு, வயது மேலெல்லை அமைவுடையதன்று.

பிணை : நம்பிக்கை உத்தரவாத முறிபேரில் ரூபா 10,000/-

**2. தகவல் உத்தியோகத்தர்/வெளியீட்டு உத்தியோகத்தர்—தரம் I**

தகுதி : வேட்பாளர், அங்கீகரிக்கப்பெற்ற பல்கலைக்கழகப்பட்டதாரியாய், க. பொ. சா. (உ.நி.) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தியும் உடையவராயிருத்தல் வேண்டும்.

கமத்தொழில் பிரச்சினைகள் பற்றிய அறிவும், கமநலத்துறையில் அனுபவமும் உண்மை மேலதிக தகைமைகளாகக் கணிக்கப்படும்.

வயது : 22 முதல் 25 வரை. அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளார்க்கு வயது மேலெல்லை அமைவுடையதன்று.

வேதனம் : சகலமுமுட்பட, மாதமொன்றுக்கு ரூ. 650—10×30, 5 × 45—ரூ. 1,175

முன்னே சுட்டிய தினுமுயர்ந்த தகைமையும் அனுபவமுமுள்ள வேட்பாளர் மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில், அவர் தம் தகுதிக்கேற்ற வேதனநிலையில் நியமனமளிக்கப்பெறலாம்.

தெரிவு செய்யப்பெறும் வேட்பாளர் நிறுவனத்தின் தொடர்பு ஆய்வு விடயங்களிலும், நிறுவனச் சஞ்சிகைகளை சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகளில் தயாரித்து வெளியிடுவதிலும் துணைபுரியுமாறு வேண்டப் படுவர்.

ஆங்கிலத்திலிருந்து சிங்கள அல்லது தமிழுக்கும் மறுவழியும் மொழிபெயர்க்கும் ஆற்றல் அவசியமாக வேண்டற்பாலது.

**3. தகவல் உத்தியோகத்தர்/வெளியீட்டு உத்தியோகத்தர்—தரம் II :**

தகுதி : வேட்பாளர். பொ. க. சா. (உ.நி.) அல்லது இடைநிலைப் பரீட்சையில் (சா.நி.) தேர்ச்சியும் சி. பா. த. ப, அல்லது க. பொ. த. சா, (சா.நி.) பரீட்சையில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகாரம் பெற்ற ஓர் தாபனத்தில், தகவல், வெளியீட்டு வேலைதொடர்பில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவமுடையராதல் வேண்டும்.

அல்லது,

வேட்பாளர், க. பொ. சா. (சா.நி.) பரீட்சையில், சிங்களம் அல்லது தமிழும் ஆங்கிலமும் உட்படுமாறு குறைந்தது நான்கு திறமைச் சித்திகளேனும் அமைய 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அங்கீகாரம் பெற்ற ஓர் தாபனத்தில் தகவல், வெளியீட்டு வேலைத்தொடர்பில் 10 வருடத்திற்குக் குறையாத அனுபவமும் உடையராதல் வேண்டும்.

கமத்தொழில் பிரச்சினைகள் பற்றிய அறிவும் கமநலத்துறையில் அனுபவமும் உண்மை மேலதிக தகைமைகளாகக் கணிக்கப்படும்.

வயது : 22 முதல் 35 வரை. அரசாங்க/யாக்கச் சேவையிலுள்ளார்க்கு, வயதுமேலெல்லை அமைவுடையதன்று.

வேதனம் : சகலமுமுட்பட மாதமொன்றுக்கு ரூ. 570—9×20, 6×25—ரூ. 900. முன்னே சுட்டியதினு முயர்ந்த தகைமையும் அனுபவமுள்ள வேட்பாளர், மேற்குறித்த வேதன அளவுத்திட்டத்தில் அவர்தம் தகுதிக்கேற்ற வேதனநிலையில் நியமனமளிக்கப் பெறலாம்.

தெரிவு செய்யப்பெறும் வேட்பாளர் நிறுவனத்தின் தொடர்பு ஆய்வுவிடயங்களிலும் நிறுவனச் சஞ்சிகைகளை சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிகளில் தயாரித்து வெளியிடுவதிலும் துணைபுரியுமாறு வேண்டப்படுவர்.

ஆங்கிலத்திலிருந்து சிங்களம் அல்லது தமிழுக்கும் மறுவழியும் மொழிபெயர்க்கும் ஆற்றல் அவசியம் வேண்டற்பாலது.

**4. நிகழ்ச்சிமுறை உத்தியோகத்தர் :**

தகைமை : வேட்பாளர் சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரப் பரீட்சையில்/கல்விப் பொதுத் தாரதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டியதுடன் கணிதம், வரைதல் உட்பட ஆகக்குறைந்தது 4 பாடங்களிலாவது திறமையான சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் அவர் ஒருவருட முழுநேர வரைஞர் நெறிப் பரீட்சையில் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பெற்ற தொழினுட்ப நிறுவனத்தின் 3 வருடப் பகுதி நேர கட்டட, கட்டுமான, வரைஞர் நெறிப் பரீட்சையில் அல்லது உயர் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தலும் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பெற்ற வரைஞருக்காக அளவையாளர் அதிபதியினால் வழங்கப்படும் சான்றிதழை வைத்திருப்பது மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும்.

நிகழ்ச்சிமுறை உத்தியோகத்தரின் கடமைகள் : விரிவுரைகள், கருத்தரங்குகள், கல்வி நெறிகள், வெளியீடுகள் ஆகியவற்றுக்கும் கமநலத்தொழில் ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் முன்னேற்றக் கட்டுப்பாட்டு அறைக்கும் அட்டவணை, விளக்கப்படம், தேசப்படம், மாதிரிப்படம் முதலியவை தயாரிப்பதை அடக்கும்.

வேட்பாளர் அரசாங்கத் திணைக்களம்/யாக்கம் அல்லது வர்த்தகத் தாபனம் ஒன்றில் ஆகக் குறைந்தது 5 வருடங்களுக்காவது வரைஞராகக் கடமையாற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது : 22 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அரசாங்கத் திணைக்களத்தில்/யாக்கத்தில் வேலை செய்பவருக்கு உயர் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

வேதனம் : மாதமொன்றுக்கு சகலதும் உள்ளடங்கலாக ரூபா 570—9×20, 6×25—ரூ. 900.

உயர்ந்த தகைமைகளும் அனுபவமும் உள்ள வேட்பாளர்கள் மேலேயுள்ள வேதன அளவுத் திட்டத்தில் பொருத்தமான ஒரு நிலையில் வைக்கப்படலாம்.

**5. வரைஞர்—கீழ்தரம் :**

வேட்பாளர் சிரேட்ட பாடசாலைத் தாரதரப் பத்திரப் பரீட்சையில்/கல்விப் பொதுத் தாரதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) ஒரே தடவையில் 6 பாடங்களிற் சித்திபெற்றிருக்க வேண்டியதுடன் கணிதம், வரைதல் உட்பட ஆகக்குறைந்தது 4 பாடங்களிலாவது திறமையான சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன், ஒரு வருட முழுநேர வரைஞர் நெறிப் பரீட்சையில் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பெற்ற தொழினுட்ப நிறுவனத்தின் 3 வருடப் பகுதிநேரக் கட்டட, கட்டுமான, வரைஞர் நெறிப் பரீட்சையில் அல்லது உயர் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தலும் வேண்டும்.

அதிகாரமளிக்கப்பெற்ற வரைஞருக்காக அளவையாளர் அதிபதியினால் வழங்கப்படும் சான்றிதழை வைத்திருப்பது மேலதிகத் தகைமையாகக் கணிக்கப்படும். வேட்பாளர் அரசாங்கத் திணைக்களம்/யாக்கம் அல்லது வர்த்தகத் தாபனம் ஒன்றில் ஆகக்குறைந்தது 2 வருடங்களுக்காவது வரைஞராகக் கடமையாற்றிய அனுபவம் பெற்று இருத்தல் வேண்டும்.

வயது : 22 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அரசாங்கத் திணைக்களத்தில்/யாக்கத்தில் வேலைசெய்பவருக்கு உயர் வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது.

வேதனம் : மாதமொன்றுக்குச் சகலதும் உள்ளடங்கலாக ரூபா 350—10×15, 5×20—ரூபா 600.

உயர்ந்த தகைமைகளும், அனுபவமும் உள்ள வேட்பாளர்கள் மேலேயுள்ள வேதன அளவுத் திட்டத்தில் பொருத்தமான ஒரு நிலையில் வைக்கப்படலாம்.

*6. சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர்—சிங்களம்/ஆங்கிலம்/தமிழ்*

*தகவுத்திறன்.—வேட்பாளர்கள் ஒரே தடவையில் சி.பா.த., க.பொ.த. (சாதாரணதரப்) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் நிமிடமொன்றுக்கு 60 லிருந்து 80 சொற்கள் வரை சுருக்கெழுத்தும் நிமிடமொன்றுக்கு 50 சொற்கள் தட்டெழுத்தும் செய்யக்கூடியவர்களாக விருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர் பிரதியடித்தல் செய்யுமாறு கேட்கப்படுவர். இது பட்டோலைகள், கூற்றுகள் தயாரித்தலையும் உள்ளடக்கும்.*

*வேட்பாளர் நேர்த்தியாகவும் செம்மையாகவும் தட்டச்சடிக்கக் கூடியவராகவிருத்தல் வேண்டும். ஏற்கனவே அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

*வயது.—22 லிருந்து 35 வயதிற்கு இடைப்பட்டவர்கள். உச்ச வயதெல்லை ஏற்கனவே அரசாங்க/யாக்க சேவையிலுள்ளவர்களுக்கு ஏற்புடையதாகமாட்டாது.*

*வேதனம்.—மாதமொன்றுக்கு எல்லாவற்றையும் உள்ளிட்டு ரூபா 275—7×10—7×15—ரூபா 450 அனுபவமுள்ள வேட்பாளர்கள் மேலேயுள்ள வேதன அளவுத்திட்டத்தில் தகுந்த வேதன அளவில் நியமிக்கப்படுவதற்கு கருதப்படலாம்.*

*சேவை நிபந்தனைகள்.—தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள்—*

*(அ) 2 ஆண்டுக்காலத்திற்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படுவர். அரசாங்க திணைக்களங்களில்/யாக்கங்களில்/நிறுவகங்களில் உள்ள நிரந்தரப் பணியாளர்கள் ஓராண்டுக் காலத்திற்கு பதில் கடமையாற்றும் நிலையில், நியமிக்கப்படுவர் ;*

*(ஆ) 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு வழக்கிலுள்ள அல்லது எதிர்காலத்தில் புகுத்தப்படவுள்ள சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர் ;*

*(இ) தேசிய ஏற்பாட்டு நிதியத்திற்குப் பங்கு தொகையுதவுமாறும் நடைமுறையிலுள்ள நிறுவகத்தின் சகல விதிகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் அல்லது 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க எதிர்காலத்தில் செய்யப்படவுள்ள விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது இரண்டுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.*

*பொது நிபந்தனைகள்*

*1. வேட்பாளர்கள் தங்களுடைய விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் படிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :—*

*(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ்கள்.*

*(ஆ) தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து பெற்ற இரண்டு நற்சான்றிதழ்கள். இதில் ஒன்று வேட்பாளர் இறுதியாகப் படித்த கல்வி நிறுவனத்தின் தலைவரிடமிருந்து பெறப்பட்டதாக விருத்தல் வேண்டும் ;*

*(இ) ஆகவுயர்ந்த கல்விச் சான்றிதழ் ;*

*(ஈ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியெய்திய ஆகவுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.*

*2. விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த அறிவிப்பின் தேவைகளுக்கு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மூலச் சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது அதைச் செய்யத்தவறும் வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.*

*3. வேட்பாளர்கள் கொழும்பில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு வேண்டப்படுவர். பிரயாணச் செலவோ பிற செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.*

*4. ஒவ்வொரு வேட்பாளரும் சிறந்த ஒழுக்கமும் உடனலமும் உடையவரென்பதற்கு திருத்திகரமான சான்றை வழங்குதல் வேண்டும்.*

*5. அரசாங்க சேவையிலுள்ளவர்களைத் தவிர்ந்த பிற நியமிப்புப் பெறுநர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கான தங்களுடைய உடற்றகுதியைப் பற்றி அரசாங்க மருத்துவ உத்தியோகத்தரொருவரினால் நடத்தப்படும் மருத்துவப் பரீட்சையில் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.*

*6. அரசாங்கத் திணைக்களங்களில்/யாக்கங்களில்/நிறுவகங்களில் சேவைசெய்யும் வேட்பாளர்கள் தத்தம் நிறுவனங்களின் தலைவர்களுக்கூடாக தாம் நியமிப்புக்காகத் தெரிவு செய்யப்படின் விடுவிக்கப்படுவார்கள் என்று கூறப்பட்டு அனுப்பும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.*

*பணிப்பாளர்,*
*கலநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்.*

*கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகம்,*
*33, எலிபாங்க் வீதி,*
*கொழும்பு 5.*

*2-579—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47*

---

**ஆயுள்வேதத் திணைக்களம்**

**II ஆந் தர வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சர் பதவி**

**ஆயுள்வேத** திணைக்களத்தில் வைத்தியசாலை மருத்துவ அத்தியட்சர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவங்களில் செய்யப்பட்டு பின்வரும் திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக செயலாளர், சுகாதார அமைச்சு, கொழும்பு 1 என்ற முகவரியில் வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும் :—

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள், 9.3.1973.

(ஆ) வெளியூர் விண்ணப்பங்கள், 16.3.1973.

**குறிப்பு.**—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய கடிதம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(ii) வெளிநாட்டு அபேட்சகர்கள் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு; கொழும்பு 1, சுகாதார அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள், அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **வேலை நிபந்தனைகளும் சேவை நியதிகளும்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. அரசாங்க சேவைச் சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் சொந்த மருத்துவச் செய்கையில் ஈடுபடும் உரித்துடையவராகார்.

(iii) பதவியில் உறுதிப்படுத்தப்படு முன்னர் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் நிதிப் பிரமாணங்கள், அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள வைத்தியசாலை நிருவாகம் தொடர்பான பிரமாணங்கள், சிங்களம்/தமிழ் ஆகியவற்றிலான திணைக்களப் பரீட்சையொன்றில் சித்தி பெறுதல் வேண்டும். இச்சோதனை ஆயுள்வேதத் திணைக்களத்தில் (பொதுத்தர) மருத்துவ உத்தியோகத்தர்களுக்குப் பொருத்தமான சோதனையாகும். இப் பரீட்சையில் சித்திபெறத் தவறின் பிரமாணங்களின் சட்டக்கோவையின் 9 : 6, 9 : 7, 9 : 8 பிரிவுகள் ஏற்புடையனவாகும்.

3. **சம்பளங்களும் படிகளும்.**—இப்பதவிக்காய் திரட்டிய சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு:—ஆண்டொன்றுக்கு 9,600—360×4—480×7—14,400 ரூபாவாகும். 11,520 ரூபாவுக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு. இது வேலை, நடத்தை பற்றித் திணைக்களத்தலைவர் கொடுக்கும் பத்திரத்தையும் கொண்டுள்ளதாகும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும்—

(அ) சிறந்த நல்லொழுக்கமும், தேகாரோக்கியமும் உடையவரென்றும் ;

(ஆ) 1973, பெப்ருவரி 15 ஆந் திகதியன்று 33 வயதுக்கு குறையாதவரென்றும் 45 வயதுக்கு மேற்படாதவரென்றும் ;

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேதக் கல்லூரியொன்றின் டிப்ளோமா பட்டமுடையவரென்றும் ;

(ஈ) அரசாங்க ஆயுள்வேத வைத்தியசாலையொன்றில் வைத்தியராக 10 வருட அனுபவமுடையவரென்றும் அல்லது பொது ஆயுள்வேத தொழில் செய்பவராக 15 வருட அனுபவமுடையவரென்றும் ;

(உ) ஆயுள்வேதத்தில் பட்டப் பின் தகைமையுடையவரென்றும் அல்லது ஆயுள்வேதத்தில் ஆரம்ப ஆராய்ச்சியில் அல்லது ஆயுள்வேத பிரசுரிப்புகளினுல் குறிப்பிடத்தக்க சாதனைகளினுல் புகழ்பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—நிருவாகத்தில் அனுபவமுடைமை கூடுதலான தகைமையளிக்கும்.

5. கேட்கப்படும்பொழுது அபேட்சகர் பின்வருஞ் சாதனங்கள் யாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் அளிக்குமாறு வேண்டப் படுவர் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி பெறும் பாடசாலைகளின் பிரமாணக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்படும் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ;

(ஆ) பட்டம் அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணம் பற்றிய இரு சான்றிதழ்கள் அவற்றுள் ஒன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் சித்திபெற்ற உயர் பரீட்சையின் சான்றிதழ்.

**குறிப்பு.**—(i) சாதனங்கள் அல்லது சாதனங்களின் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

7. விண்ணப்பங்களும் அவை தொடர்பான கடிதத் தொடர்புகளும் செயலாளர், சுகாதார அமைச்சு என்று விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக் கூடாது.

8. இந்த வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதும் அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமுடையதுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

சுகாதார அமைச்சு,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆடு பெப்புருவரி மீ 5 ந் வ.

வி. ஈ. எஸ். வீரதுங்க,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

இலக்கம்..................................
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**சுகாதார அமைச்சு**

விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பிக்கப்பட்ட பதவி ............................................................ பதவி

.................................................................................. திணைக்களம்

| | |
|---|---|
| 2. முழுப்பெயரும் :<br>(பெரிய எழுத்துக்களில்) | |
| 3. அஞ்சல் முகவரி :<br>(முகவரியில் மாற்றஞ் செய்யப்பட்டால் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்) | |
| 4. பிறந்த திகதி :<br>ஆண்டு \| மாதம் \| திகதி | 6. நீர் இலங்கைக் குடியானவரா ? பரம்பரை காரணமாகவா பதிவு காரணமாகவா என்பதைக் குறிப்பிடவும்<br>((1) ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்கவும்) |
| 5. உள்ளூர் விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்று சரியான வயது :<br>வருடங்கள் \| மாதங்கள் \| நாட்கள் | 7. பிறந்த இடம்—(2 ஆம் இலக்கக் குறிப்பைப் பார்க்கவும்)<br>(அ) விண்ணப்பகாரர்<br>(ஆ) தகப்பன்<br>(இ) தகப்பன் வழிப்பாட்டன்<br>(ஈ) தகப்பன் வழிப்பூட்டன் |
| 8. (அ) பால் :<br>(ஆ) திருமணமானவர், தனியானவர், தாரமிழந்தவர் : | 9. பின்வருவனவற்றில் சித்திபெற்ற உயர் பரீட்சைகள் :<br>(1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம் :<br>(1) ....................................<br>(2) ....................................<br>(3) .................................... |

10. 12 வயது தொடக்கம் சென்ற பாடசாலைகள், கல்லூரிகள், பிற தாபனங்கள் ஆகியவை :

| பொதுக் கல்வி | | | தொழிற் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| (1) .................. | ........ | ........ | (1) .................. | ........ | ........ |
| (2) .................. | ........ | ........ | (2) .................. | ........ | ........ |
| (3) .................. | ........ | ........ | (3) .................. | ........ | ........ |
| (4) .................. | ........ | ........ | (4) .................. | ........ | ........ |
| (5) .................. | ........ | ........ | (5) .................. | ........ | ........ |

11. விளையாட்டுகளில் பெற்ற சிறப்புக்களும் இத்துறையில் வகித்த பொறுப்பான பதவிகளும் :

12. (அ) நீர் பணமுட்டு எதுவும் இல்லாதவரா ? அவ்வாறு இல்லையாயின் எவ்வளவுக்கு ? :

(ஆ) நீதிமன்றமொன்றில் குற்றவியற் குற்றமெதுக்கும் நீர் குற்றஞ் சாட்டப்பட்டவரா ? அவ்வாறுயின் திகதிகள், வழக்கு இலக்கம் ஆகியவற்றொடு முழு விபரங்களையும் தருக :

13. உயர்கல்வி, உயர் தொழில், தொழில்நுட்பத் தகைமைகள் :
(பட்டங்கள், சிறப்புகள், உயர்தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இரண்டினதும் தகைமைகளைத் திகதி, வகுப்பில் சித்தி பெற்றிருப்பின் அதனையும், பாடங்கள், நிலையங்களின் பெயர்கள் ஆகிய விபரங்களோடு தருக)

14. தற்போதைய தொழிலும், முன்னர் செய்த தொழில் எதுவுமிருப்பின் அவற்றையும் (தொழில் சேர்ந்த, விலகிய திகதிகளும் பெற்ற ஆண்டுச் சம்பளமும் கொடுக்கப்படல் வேண்டும்)

**முக்கியம்.**—அரசாங்கத் தொழிலை விட்டு விலகிய காரணத்தை இதன் கீழுள்ள 16 ஆம் கூண்டில் குறிப்பிடவும்

| | பதவி | தொடக்கம் | வரை | ஆண்டுச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|---|
| (1) | ........ | ........ | ........ | ........ |
| (2) | ........ | ........ | ........ | ........ |
| (3) | ........ | ........ | ........ | ........ |
| (4) | ........ | ........ | ........ | ........ |
| (5) | ........ | ........ | ........ | ........ |
| (6) | ........ | ........ | ........ | ........ |
| (7) | ........ | ........ | ........ | ........ |
| (8) | ........ | ........ | ........ | ........ |

15. சிறப்புத் தகைமைகள் :
(அறிவித்தலிலுள்ள சிறப்புத் தகைமைகள் அல்லது அனுபவம் அல்லது இரண்டுமுடையவரா)
அவ்வாறு உடையவராயின் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக. வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புத் தேவைகளைப் பார்க்க.

16. மேலும் விபரங்கள் எதுவுமிருப்பின் :

17. இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். இதன்கண் உள்ள விபரங்கள் எவையும் பொய்யானவை அல்லது பிழையானவை எனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து தகைமை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து நட்டஈடெதுவுமின்றி வேலை நீக்கஞ் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை யான் அறிவேன்.

..................................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

**குறிப்புகள்.**—(1) பதிவு காரணமாக இலங்கைக் குடியானவராயின் தொடர் எண்ணையும் குடியுரிமைச் சான்றிதழின் திகதியையும் குறிப்பிடுக.
(2) விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் (ஆ) அல்லது (இ), (ஈ) ஆகிய இரண்டும் நிரப்பப்படல் வேண்டும். அவர் இலங்கையில் பிறக்காதவராயின் (அ) வை விட (ஆ) அல்லது (இ), (ஈ) நிரப்பப்படல் வேண்டும்.

அபேட்சகர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் அறிக்கை.

..................................................
திணைக்களத் தலைவரின் பெயரும், பதவிப்பெயரும்.

திகதி : ————.

2-658—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

### பகுதிநேர அறிவிப்பாளர் பதவிகள் (தமிழ்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் தமிழ் பகுதிநேர அறிவிப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் இலங்கையரிடமிருந்து கோரப்படுகின்றன. **விண்ணப்பதாரர்கள் ரொறிங்டன் சதுக்கத்தில் உள்ள இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்திலிருந்து ஐந்து மைல் சுற்றளவுக்குள் வசிப்பவர்களாகவும் தற்போது உத்தியோகம் வகிக்காதவர்களாகவும் இருக்க வேண்டும்.** தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் சமயாசமய அடிப்படையில் நியமனம் வழங்கப்படுவார்கள். இவர்கள் வேலை செய்யும் ஒரு மணித்தியாலத்திற்கு 3 ரூபா வீதம் ஒரு நாளைக்கு 24 ரூபாவுக்கு அதிகப்படாத ஊதியத்தைப் பெறும் வகையில் நியமனம் அளிக்கப்படும். போக்குவரத்து கட்டணமோ அல்லது வேறெந்த படிகளோ வழங்கப்படமாட்டாது.

2. விண்ணப்பதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஒரே தடவையில் 6 பாடங்களில் அல்லது இதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் இருக்க வேண்டும். தமிழில் நியாயமான தராதரம் பெற்றிருக்க வேண்டும்.

3. தெரிவு செய்யப்பம் விண்ணப்பதாரர்கள் ஊதியமின்றி குறுகிய காலப் பயிற்சியைப் பெற வேண்டும்.

4. பகுதிநேர அறிவிப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் கூட்டுத்தாபனத்தின் ஒழுங்கு முறையிலான ஊழியர்கள் அல்லாத போதிலும் தேவைப்படும் நேரத்தில் கட்மையாற்ற அழைக்கப்படுவார்கள்.

5. இந்த வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய, மா அதிபர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு-7 என்ற விலாசத்துக்கு 3.3.1973 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூயில் "பகுதிநேர அறிவிப்பாளர் பதவிகள்—தமிழ்" என்று எழுதப்பட வேண்டும்.

6. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

ஒஸ்வால்ட் திலகரத்ன,
பதில் மா அதிபர்.

05, பெப்ரவரி 1973,
கொழும்பு-7.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் :————.
2. முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
   (திரு, திருமதி, செல்வி என்பதைக் குறிக்கவும்)
3. வீட்டு விலாசம் :————.
4. பிறந்த திகதியும் இடமும் :————.
   (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
5. 3.3.73 ல் வயது :————. வருடம் :————. மாதம் :————
   நாள் :————.
6. சாகியம் :————.
7. கல்வித் தகைமைகள் :————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
8. தேர்ச்சித் தரம்,
   (அ) தமிழ் :————.
   (ஆ) ஆங்கிலம் :————.
   (இ) வேறுமொழிகள் :————.
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
9. ஒலிபரப்புத் துறையில் அனுபவம் அல்லது வேறு விசேஷ தகைமைகள்
   (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)
10. தற்பொழுது ஏதாவது தொழில் செய்தால் அதன் விபரம்: ————.
11. நற்சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளப்பட்ட இருவரின் பெயர்களும் விலாசங்களும் :————.
    1.
    2.
    (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் என்னால் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இதனுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்றும் தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனாக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

2-628—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### யாழ் நகர சடுதி மரண விசாரணையாளர் பதவி

யாழ் நகர சடுதி மரண விசாரணையாளர் பதவிக்கு ஒருவரை நியமிக்கவிருப்பதனால், யாழ் நகர பிரதேசத்துக்குள் நிரந்தரமாக வசிப்பவரிடமிருந்து மாத்திரம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**2. அரசாங்க, கூட்டுத்தாபன மற்றும் உள்ளூராட்சிமன்ற ஊழியர்களினதும், உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினதும், 1973.2.28 ம் திகதியின்று 30 வயதுக்குக் குறைந்தவர்களிடமிருந்தும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**3. சகல விண்ணப்பதாரர்களும் கீழ்க்காணும் விபரங்களையும், சான்றுப் பத்திரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும்.**

1. முழுப் பெயரும் விலாசமும் :————.
2. வசிக்கும் இடம் :————.
3. வயதும் பிறந்த திகதியும் :————.
4. விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா ? :————.
5. கல்வித் தகைமைகள் :————.
   தமிழ் :————.
   ஆங்கிலம் :————.
6. தற்போது வகிக்கும் பதவி அல்லது முன்பு வகித்த பதவிகள் :————.
7. சமீபத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சான்றிதழ்கள் (பிரதிகள்) :————.

எம். ரீ. டபிள்யூ. அமரசேகரா,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

யாழ் மாவட்ட அரசாங்கச் செயலகம்,
கச்சேரி, யாழ்ப்பாணம்,
1973, தை, 31.

3-553—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் "யந்திரப் பொறியியல் உதவியாளர்" பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தகைமைகள்**

(1) கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் யந்திரப் பொறியியல் துறை இறுதித் தேர்ச்சிப் பத்திரம், அல்லது யந்திரப் பொறியியல் கனிஷ்ட தொழில்நுட்பத் தேர்ச்சிப் புத்திரமும் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சியும்.

(2) பெரிய டீசெல் மின்சார யந்திரங்களையும் குளிர் சாதன யந்திரங்களையும் இயக்குவதும், பேணுவதும் பற்றிய நிறைவான அறிவும் அனுபவமும்.

(3) டீசெல் மின் உற்பத்தி யந்திரத்தை அமைப்பதில் அனுபவம்.

(4) வேலைத்தலப் பயிற்சி உட்பட யந்திரப் பொறியியல் பயிற்சி பற்றிய அறிவும் அனுபவமும்.

(5) தம் கீழ்ப் பணியாற்றும் உத்தியோகத்தர்களைக் கட்டுப்படுத்தும் திறன்.

(6) மேற்பார்வையாளர் என்ற முறையில் ஐந்து வருட அனுபவம்.

**வயது.**—25—40.

**வேதன விகிதம்.**—ரூபா 680—860 (6 × 30).

விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தின் உருவில் அமைந்திருக்கவேண்டும். அவை 10.3.73 க்கு முன் கிடைக்கத்தக்கவையாய் "மா அதிகாரி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கொழும்பு 7" என்ற விலாசத்துக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபுறத் தலைப்பில் "யந்திரப் பொறியியல் உதவியாளர்" என்று குறிப்பிடவேண்டும்.

ஒஸ்வால்ட் திலகரத்ன,
பதில் மா அதிகாரி.

கொழும்பு 7,
1973 ம் ஆண்டு பெப்புருவரி மீ 07 ந் உ.

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

.................................................. பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் : ————.
   (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் : ————.
   (திரு./திருமதி/செல்வி) : ————.
2. வீட்டு முகவரி : ————.
3. பிறந்த திகதி : ————.
   10.3.73 அன்று வயது :
   வரு. : ————, மா. : ————, நாள். : ————.
   (பிறப்புச்சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. தேசிய இனம் : ————.
5. கல்வியும் பயிற்சியும் :—

| கற்ற பாடசாலைகள் அல்லது கல்லூரிகள் | திகதி முதல் வரை | தேர்ச்சி பெற்ற பரீட்சை | மேற்கொண்ட பொறுப்புகள் பதவிகள் |
|---|---|---|---|
| | | | |

6. தேர்ச்சி பெற்ற மிக உயர்ந்த பரீட்சை :—
   சிங்களம் : ————, தமிழ் : ————, ஆங்கிலம் : ————.
   (தேர்ச்சிச் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
7. தொழில்நுட்ப/உத்தியோகத் தகைமைகள் : ————.
8. அனுபவம்:—முந்தைய அனுபவம் உத்தியோகம் பற்றிய விவரங்கள் ஆண்டுக் கிரமப்படி : ————.
9. சொந்த வாழ்க்கையில் உங்களை நன்கறிந்தவர்களான மூவரின் பெயரும் விலாசமும் பதவியும். இவர்கள் உங்கள் உறவினர்களாக இருத்தலாகாது :—
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியுள்ளோரின் பெயரும் விலாசமும் :—
   (1) ————.
   (2) ————.
   (3) ————.
11. பிற விவரங்கள் :————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதியளிக்கிறேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விவரங்களுள் எவையேனும் பொய்யானவை என்றோ பிழையானவை என்றோ காணப்பட்டால் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதியை இழந்தவனுவேன் என்பதையும் பதவி ஏற்ற பின் பிழை கண்டுபிடிக்கப்பட்டால் யாதொரு நட்டஈடுமின்றி வேலையினின்று நீக்கப்படுவேன் என்பதையும் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரர் கையொப்பம்.

திகதி : ————.

2-629—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

---

**ஸ்ரீ லங்கா இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சி**

ஸ்ரீ லங்கா இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்புக்காரர்கள் ஸ்ரீ லங்காவில் பயிற்றப்படுவர்.

2. வெற்றிகரமாக ஸ்ரீ லங்காவில் பயிற்சிக் காலத்தைப் பூர்த்திசெய்யும் படைப்பயிற்சி பயிலுநர்கள் அரசாணை அமர்வு செய்யப்பட்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தின் நிரந்தரப் படையில் உத்தியோகத்தர்களாக இரண்டாவது லெப்டினன்ட் பதவியில் அமர்த்தப்பட்டு அவரவர்களின் தகுதிக்கேற்ப போர்ப்படையில் அல்லது பொது சேவைப்படையில் அமர்த்தப்படுவர்.

3. **தகைமைகள் :** விண்ணப்பதாரர்கள்—

(அ) இலங்கைப் பிரசைகளாகவும்,

(ஆ) 1973.3.10 ந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 24 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) இலங்கைக் கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணம்) ஆறு பாடங்களில் குறைந்தபட்சம் நாலு பாடங்களில் திறமையான சித்தியுடன் இருதடவைகளுக்கு மேற்படாமல் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலத்துடன் கணிதம் அல்லது தூய கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—பொதுத் தகைமைக்கேற்ப பௌதிகத்திலும் தூய கணித்திலும் திறமையான சித்தியுடையோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(ஈ) விவாகமாகாதவர்களாயிருத்தல் வேண்டும். பயிற்சிக்காலத்தில் விவாகமாவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

(உ) தேவைப்படும் வைத்தியப் பரிசோதனைக்கு அமைவாகவிருக்க வேண்டும். இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ண்ப்பக்காரர்கள் இலங்கை இராணுவத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனைக்குட்பட வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

(அ) பயிலுநர் படைப்பயிற்சியாளர்களால் சேர்த்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஐந்து வருடங்கள் நிரந்தரப்படையிலும் ஏழு வருடங்கள் மேற்படையிலும் சேவைசெய்ய அனுமதிக்கப்படுவர்.

(ஆ) பயிற்சியிலிருக்கும் பயிலுநர் படைப்பயிற்சியாளரின் வருடாந்தச் சம்பள விகிதம் நியதிகளுக்கு இணங்க ரூபா 5,160 ஆகும். பயிலுநர் பயிற்சியாளராகவிருக்கும் காலத்தில் அவர் எந்தச் சம்பளவேற்றத்துக்கும் உரிமையுடையராகார்.

(இ) படைத்தளபதியினுல் விதிக்கப்படும் பயிற்சியை ஸ்ரீ லங்காவில் மேற்கொள்ளும்படி பயிலுநர் வேண்டப்படுவர். பயிற்சிக் காலம் ஏறத்தாள பதினெட்டு மாதங்களாகும்.

(ஈ) இக்காலத்தில் பயிலுநர் நிலை மற்றைய வரிசைப் பதவியினரைப் போன்றதாயும் இராணுவச் சட்டத்திற்குட்பட்டதாயும் இருக்கும்.

(உ) (i) பயிற்சியிலிருக்கும்போது, பயிலுநர் தாமாகவே அபேட்சகர் நிலையை விட்டுப்பிரியின் அக்காலம்வரை அவர்மீது செலவழிக்கப்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஸ்ரீ லங்கா அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

(ii) தமது பயிற்சியின்போது கெட்ட நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிற காரணங்களின் நிமித்தம் விசாரணை அமர்வுபெற தகைமையற்றவர் என்று அதிகாரிகளினுல் அறிக்கை செய்யப்படின் ஸ்ரீ லங்கா அரசாங்கத்தினுல் அவரது பேரில் செலவிடப்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஸ்ரீ லங்கா அரசாங்கத்திற்கு கொடுத்தல் வேண்டும்.

(ஊ) அரசாணை அமர்வுக்கு நியமிக்கப்பட்டதும் பயிலுநராகச் சேர்ந்த பொழுது தரைப்படையின் நிரந்தரப்படையில் செய்துவந்த கடமைகளிலிருந்து விடுவிக்கப்படுவர்.

(எ) உத்தியோகத்தர்களாய அரசாணை அமர்வு பெற்றதும் அவர்கள் இராணுவத்தில் குறைந்தபட்சம் ஏழு வருடங்கள் சேவை செய்யுமாறு எதிர்பார்க்கப்படுவர்.

(ஏ) சம்பளம், வாய்ப்புகள், சேவை நிபந்தனைகள் தொடர்பான கீழ்க்காணும் ஒழுங்குவிதிகள் இவ்வுத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் :

(1) 1961 ம் ஆண்டு எப்ரல் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறன 1961 ம் ஆண்டின் இராணுவ வேதனச்சட்டக் கோவை.

(2) 1949 ம் ஆண்டு ஒக்டோபர் 10 ந் திகதியிடப்பட்ட 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறன 1949 ம் ஆண்டின் உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதி.

(3) 1961 ம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 28 ந் திகதியிடப்பட்ட 12,080 இலக்கத்தையுடைய இலங்கை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறன 1961 ம் ஆண்டின் தரைப்படை உபகாரச்சம்பள பணிக் கொடைச் சட்டக்கோவை.

4 (i) பதவிகள் உபகாரச்சம்பளம் பெறுவதற்கு உரித்துடையன அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் ஒரு பயிலுநர் உத்தியோகத்தராகத் (ஒபிசர் கடெற்) திரட்டிக்கொள்ளப்பட்டதும் ஒரு சகாய நிதிக்குத் தனது உதவுதொகையாகத் தனது ஒன்றுதிரட்டிய சம்பளத்தின் ஆறு சத வீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தனது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படக் கடவர். ஒரு சேவை உபகாரச்சம்பளத்தை அல்லது பணிக்கொடையை வழங்கப்படுதலைக் குறிக்கும் 1961 ம் ஆண்டின் தரைப்படை உபகாரச்சம்பளங்களும், பணிக்கொடைகளும் பற்றிய சட்டக்கோவையிலுள்ள ஒழுங்குவிதிகள் அமைவுடையன அல்ல.

5. கீழே 6 ம் பந்தியில் காட்டியதற்கிணங்கப் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரைப் படிவத்தில் கையொப்பமிட்டு அவற்றை விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதியுரைப்படிவத்தில் காட்டிய வண்ணம் இலங்கை அரசாங்கத்துடன் இந்த அபேட்சகர்கள் நியமனம் பெறுமுன் ஓர் ஒப்பந்தமுறியைச் செய்தல் வேண்டும்.

6. விண்ணப்பகாரரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் கையெழுத்திடப்படவேண்டிய உறுதியுரை :

(அ) .................................................... ஆகிய ஸ்ரீ லங்கா இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சி விண்ணப்பகாரரின் *பெற்றோர்/பாதுகாவலர் நானேயாவேன்.

(ஆ) மேலே கூறப்பட்ட விண்ணப்பக்காரர் இலங்கையில் பயிற்சி நெறிக்காக தெரிவு செய்யப்படும் பட்சத்தில் பின்வரும் நிபந்தனைகளுக்கும் இத்தால் பொறுப்பேற்கிறேன் :—

(i) பயிற்சிக்காலத்தில் விண்ணப்பகாரருக்கு ஏற்படும் எல்லா தனிப்பட்ட செலவுகளும்,

(ii) பயிற்சியிலிருக்கும்போது மேலே கூறிய விண்ணப்பகாரர் தாமாகவே விலகினால் இலங்கை அரசாங்கத்தினால் விண்ணப்பகாரரின் கணக்கில் செலவிடப்படும் எல்லாச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக்கொடுப்பதற்கும்,

(iii) தமது பயிற்சியின் போது (கெட்ட நடத்தை காரணமாக அல்லது தமது கட்டுப்பாட்டிற்குட்பட்ட பிற காரணங்களின் நிமித்தம்) அரசாணை அமர்வுக்குத் தகைமை அற்றவர் என்று அதிகாரிகளினால் அறிக்கை செய்யப்படின் மேலே குறிப்பிட்ட விண்ணப்பக்காரரின்பேரில் இலங்கை அரசாங்கத்தினால் அவரதுபேரில் செலவிடப்பட்ட எல்லாச் செலவுகளையும் இலங்கை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்கும்.

*பொருந்தாதவற்றைக் கீறிவிடுக.

————————,
கையொப்பம்.

திகதி : ————.

பெயரும் விலாசமும் (தடித்த எழுத்தில்) : ————.

————————
(சாட்சியின் கையொப்பம்)

பெயரும் விலாசமும் (தடித்த எழுத்தில்) : ————.

திகதி : ————.

7. **மொழி தொடர்பான விதிகள்.**—தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென, விசேடமாக அரசாங்க மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

8. ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை தம் திணைக்களத்தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்க வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்கள் சேவையிலிருந்து விலக்கப்படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

9. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பங்கள் கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தில் எழுதப்பட்டு 1973.3.10 மத்தியானம் 12 மணிக்குப் பிந்தாமல் இராணுவ தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு என்ற முகவரியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பத்தையுடைய கடிதவுறையின் மேற்பக்கத்தில் " இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கான விண்ணப்பம் " என எழுதப்படல் வேண்டும். முடிவுத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டா.

10. விண்ணப்பங்கள் பின்வருவனவற்றின் பிரதிகளுடன் இருத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்,

(ஆ) கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்,

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்பு வாய்ந்தவர்களினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் இரு குணச்சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று கடைசியாகக் கல்விபயின்ற பாடசாலையின் தலைமையாசிரியரினால் வழங்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

11. மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களிலிருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இராணுவ தளபதியினால் விதிக்கப்படும் பரீட்சைகளுக்கு உள்ளாதல் வேண்டும். இதன் பின் இறுதித் தெரிவு, தெரிவு செய்யப்பட்டவர்களிலிருந்து, பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுச்சபையொன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்.

13. தேர்வுச் சபைகளினால் நேர்முகப்பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அத்தகைய நேர்முகப்பரீட்சைகளின் இடம், நேரம், திகதி என்பன எழுத்து மூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பின் எவ்விதப் பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ ஸ்ரீ லங்கா அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது.

எம். வீ. ஜயவீர,
பிரிகேடியர்,
இராணுவத் தளபதிக்காக.

கொழும்பு.

ஸ்ரீ லங்கா இராணுவத்தில் பயிலுநர் படைப்பயிற்சிக்கான விண்ணப்பம்

1. முழுப்பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.
2. முகவரி : ————.
3. தேசிய இனம் : ————.
(பரம்பரைவழியான ஸ்ரீ லங்கா பிரசையா அல்லது பதிவுமூலம் ஸ்ரீ லங்கா பிரசையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் ஸ்ரீ லங்காப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிக்கவும்).
4 (i) பிறந்த திகதி : ————.
(பிறப்புச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும். சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது கல்விப்பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).
(ii) 1973.3.10 திகதியன்று வயது : ————.
வருடம் : ————. மாதம் : ————. நாள் : ————
5. அருகாமையில் உள்ள பொலிசு நிலையம் : ————.
6. தந்தையாரின் பெயரும் தேசிய இனமும் : ————.
(குடியுரிமை வழங்கப்பட்டவரானால் சான்றிதழின் இலக்கமும் திகதியும் கொடுக்கப்படல் வேண்டும்).
7. தாயின் பெயரும் தேசிய இனமும் : ————.
8. கீழ்க்காணும் பாடசாலை விபரங்களைத் தருக : ————.

| பயின்ற பாடசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | பொதுப்பரீட்சைகளும் சித்தியெய்திய பாடங்களும் |
|---|---|---|---|
| | | | |

9. பாடசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுக்களில் நீர் பெற்ற தனிச்சிறப்புகள் : ————.
10. பாடசாலையில் நீர் சிறந்து விளங்கிய பிற துறைகள் : ————.
11. இலங்கை சுயேட்சைப்படை, இலங்கை சாரணர்படை, இலங்கை பயிலுநர்படை முதலிய சுயேட்சை நிறுவகங்களில் இருந்திருப்பின் அவற்றின் சேவை விபரம் : ————.
12. இதற்கு முன் படைக்கலந்தாங்கு சேவைகளுக்கு விண்ணப்பித்திருப்பின் அதன் முடிவு :————.
13. பாடசாலையைவிட்டு விலகியபின் செய்த தொழில் : ————,
14. குணச்சான்றிதழ்கள் வழங்கியவர்களின் பெயரும் முகவரியும் :—
(அ) ————.
(ஆ) ————.
15. வேறேதேனும் பொருத்தமான விடயங்கள் : ————.

மேலே தரப்பட்ட வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகள் அனைத்தும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை சரியானவையென்றும் நான் உறுதிப்படுத்துகிறேன். இராணுவத்தின் படைப்பயிற்சிக்கான எல்லாச் சேவை நிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக்கொண்டேன். அத்துடன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இந்த உத்தியோகத்தர்களுக்கான சம்பளம், வாய்ப்புகள், சேவை நிபந்தனைகளையும் அறிந்துகொண்டேன்.

————————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.

2—659—15.02.73 ந திகதிய வர்த்தமானி இல. 47

### கமத்தொழில் திணைக்களம்

### கமத்தொழிற் போதனாசிரியர் பதவிகள்

கமத்தொழில் திணைக்களத்துக்கு கமத்தொழிற் போதனாசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தையொத்த விண்ணப்பம் தயாரித்து, 1973 மார்ச் 15 ம் திகதியோ அல்லது அதற்கு முன்னராகவோ, 'கமத்தொழிற் பிரதி பணிப்பாளர் (பரிபாலனம்), கமத்தொழில் திணைக்களம், பேராதனை' என்னும் முகவரிக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

2. **வேலை நியதியும் நிபந்தனையும்.**—நியமனத்திற்கு, (i) (அ) நிரந்தரமான பதவி, முதலாவதாக 3 வருட தகுதி காண் நிலைக்கு உரியதாகும்.

(ஆ) தற்காலிகமான பதவி முற்றாகத் தற்காலிகமான அடிப்படையில் அமையும். அரசாங்கத்தில் நிரந்தர சேவையைக் கேட்பதற்கு எந்தவித உரித்தும் அற்றதாகும். அரசாங்கத்தின் விருப்பின் படி அரசாங்கத்தால் இவ்வேலை முடிவடையச் செய்யப்படும். ஆயினும், தற்காலிக அடிப்படையில் நியமனம் பெறுவோர் தற்காலிக காலம் முடியுமுன் ஏற்படும் கணிப்பான வெற்றிடங்களுக்கான நியமனத்திற்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

(ii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் மூன்று வருட காலத்தினுள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும். சிங்கள தேர்ச்சிப் பரீட்சைகளில் சித்தி பெற வேண்டும். முதல் வருடத்தில் தமிழில் கடமையாற்றக் கூடிய அறிவைப் பெறக்கூடியதாக விளங்க வேண்டும்.

3. **வேதனமும் படியும்.**—பதவிக்கான திரட்டிய வேதனம்—வருடாந்தம், ரூபா 3,864. வருடாந்த ஏற்றம் 19 ரூபா 144 ஆகவும், 4 ரூபா 180 ஆகவும் விளங்கும். (தகுதி காண் தடைகள் ரூபா 4,584 க்கும் ரூபா 6,024 க்கும் முன்னதாகும்).

**வகுப்பு I**—வருடம் ரூபா 7,500 விருந்து ரூபா 8,520 க்கு உயரும். இதில் வருடத்திற்கு ரூபா 180 க்கு 3 ஏற்றமும் ரூபா 240 க்கு 2 ஏற்றமும் அளிக்கப்படும்.

**விசேட வகுப்பு.**—வருடாந்தம் ரூபா 8,760 விருந்து ரூபா 9,480 க்கு வருடாந்தம் 240 ரூபாவான 3 ஏற்றங்களைக் கொண்டு அமையும்.

**குறிப்பு.**—மதிக்கப்பெற்ற பல்கலைக் கழகப்பட்டதாரியும், 1 ம் அல்லது 2 ம் பிரிவு பேராதனை அல்லது குண்டசாலைக் கமப் பாடசாலை சிரேட்ட தாராதரப் பத்திரத்தையுடையோரும் தெரிவு செய்யப்படின், மேல் உள்ள சம்பள அடிப்படையிலேயே ஆரம்ப வருடாந்த சம்பளமாக ரூபா 3,864 க்குத் தகுதியுடையவர் ஆவர். அவர்களது நியமன காலத்து ஒரு வருடத்தினுள் திணைக்களத்தினது தேசிய பாஷைச் சோதனையில் சித்தியடைய வேண்டும். குறித்த காலத்தினுள் பரீட்சையில் தேர்வு பெறத் தவறுவாராகில் அடுத்த வேதன ஏற்றம் பின்போடப்படும்.

(ii) குண்டசாலை பேராதனை கமப்பாடசாலையின் சிரேட்ட தாராதரப் பரீட்சை "சித்தி" பிரிவில் சித்தியடைந்திருப்போர் தெரிவு செய்யப்படின், தகுதிகாண் நிலையுடையோருக்கான திணைக்களத் தேர்வுப் பரீட்சையின் பகுதி I ல் சித்தி பெறும் வரை வருடாந்தம் ரூபா 3,180 வேதனத்தைப் பெறுவர். அதன்பின் மேலுள்ள சம்பள அடிப்படையின்படி வருடாந்தம் ரூபா 3,864 ஆரம்ப சம்பளத்திற்குத் தகுதி பெறுவர். அவர்களும், அவர்களது நியமனத்திலிருந்து ஒரு வருட காலத்தினுள் திணைக்களத்தால் நடாத்தப்பெறும் தேசிய பாஷைச் சோதனையில் சித்தி பெற வேண்டும். சோதனையில் குறித்த காலத்தினுள் பரீட்சை சித்தி பெறுமல் விடில், அடுத்த வேதன ஏற்றத்தைப் பின்போட வேண்டி ஏற்படும். தகுதிகாண் நிலையை உடையோருக்கான திணைக்களப் பரீட்சை பகுதி 1 ஐ, ஒரு வருடத்தினுள் சித்தியடையத் தவறுவோர் தேசிய பாஷைப் பரீட்சையிலும் அதே போல் சித்தியடைந்தால்தான் வருடாந்தம் ரூபா 3,864 சம்பளத்திற்குத் தகுதி பெறுவார்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தான் பின் வரும் தகுதிகள் கொண்டவர் என்பதைப் போதியளவு ருசுப்படுத்த வேண்டும்.

(அ) நல்ல தேகநிலையும் சிறந்த நன்னடத்தையும் கொண்டு விளங்குதல்.

(ஆ) 1973 மார்ச் 15 ல் 30 வயதுக்கு மேற்படாது இருத்தல் (அரசாங்கத்தில் நிரந்தர பதவி வகிப்போரது வயதெல்லை கணிக்கப்படாமல் அவரது விண்ணப்பம் கவனத்திற்கு எடுக்கப்படும்).

(இ) மதிக்கப் பெற்ற பல்கலைக் கழகத்தின் பட்டதாரியாகுதல், அல்லது

(i) சிரேட்ட தாராதரப் பத்திரப் பரீட்சையும் அல்லது சிங்களம் அல்லது தமிழ், எண்கணிதம் அல்லது கணிதம் மற்றும் நாலு பாடங்கள் கொண்டு ஒரே சோதனையில் ஒரே முறையில் ஐந்து பாடங்களில் சித்தி பெற்றதான கல்விப் பொதுத் தாராதரப் பத்திரமும் அல்லது இதற்கு நிகரான அல்லது உயர்தரப் பரீட்சையும்,

(ii) பேராதனை அல்லது குண்டசாலை கமப்பாடசாலைத் தாராதரப் பத்திரமும்.

5. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்துடன் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) அனுப்ப வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுப் பத்திரம். (**குறிப்பு.—உதவி** பெறும் பாடசாலைத் தேவைக்கு வழங்கப்படும் பத்திரமோ ஞானஸ்நானத் திட்சைப் பத்திரமோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) உயர்கல்விப் பத்திரம் அல்லது தொழில் தேர்ச்சிப் பத்திரம்.

(இ) சிங்களத்தில் சித்தியடைந்த உயர்தரப் பத்திரம்.

(ஈ) அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (இவ்வுப பிரிவின் கீழ் பொதுச் சேவையில் உள்ளோர் நற் சான்றிதழ்கள் அனுப்ப வேண்டியதில்லை).

**குறிப்பு.**—பத்திரங்களினதும் சான்றிதழ்களினதும் பிரதிகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

6. பொதுச் சேவையில் உள்ளோரின் விண்ணப்பங்கள் அவர்களது திணைக்களத் தலைவர்களூடாக அனுப்பப்படல் வேண்டும். குறித்த தினங்களுக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறித்த திகதியில் அல்லது திகதியினுள் திணைக்களத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தாமதத்திற்கான தக்க காரணங்களைக் காட்டி ஏற்றுக் கொண்டதைச் சிபாரிசு செய்யும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பமும் இது தொடர்பான கடிதங்களும், கமத்தொழிற் பிரதி பணிப்பாளர் (பரிபாலனம்), கமத்தொழில் திணைக்களம், பேராதனைக்கு மாத்திரமேயன்றி வேறு திணைக்கள உத்தியோகத்தருக்கு அனுப்பக் கூடாது.

8. இவ்வர்த்தமானி பிரிவு II பகுதி I ல் காணப்படும் பொதுச் சேவை நியமனத்திற்கான பொது நிபந்தனைகள் இந்நியமனத்திற்கும் சாரும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

9. எல்லா விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டது பற்றிய அறிவிப்பு அனுப்பப்படும்.

பி. ரி. ஜினேந்திரதாச,
கமத்தொழில் பணிப்பாளர்.

கமத்தொழில் திணைக்களம்,
ஜனவரி 29 1973.

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்

### கமத்தொழிற் போதனாசிரியர் பதவிகள்

### கமத்தொழில் திணைக்களம்

1. முழுப் பெயர் :————.
   (அ) சொந்தப் பெயர் :————.
   (ஆ) வேறு பெயர்கள் :————.
2. தபால் விலாசம் :————.
3. 1973 மார்ச் 15 ல் சரியான வயதும் பிறப்புத் தினமும் :————.
   (பிறப்புப் பத்திரப் பிரதி இணைக்கப்பட வேண்டும்)
4. தேசியம் எவ்வாறு பெறப்பட்டது :————.
5. பிறப்பிடம் :————.
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) அவரது தகப்பனர் :————.
   (இ) அவரது தகப்பன் வழிப் பாட்டனர் :————.
   (ஈ) அவரது தகப்பன் வழி முப்பாட்டன் :————.
6. விண்ணப்பதாரி விவாகம் முடித்தவரா, தனியானவரா ? ————.
7. கல்வியும்/அல்லது தொழிற் தகைமையும் :————.
   (பத்திரத்தின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)
8. சிங்களத்தில் சித்தியடைந்த பரீட்சை (பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்) :————.
9. அரசாங்கத்தின் கீழ் செய்த முந்திய தொழில்கள் உண்டா ? உண்டாகில், அது என்ன தகுதியில் இருந்தது என்பதையும் விலகியதற்கான காரணங்களையும் தருக :————.
10. தகைமை, அனுபவம் ஆகியவற்றுக்கான விசேட கோரிக்கைகளின் விபரங்கள் :————.
11. இப்பதவிகளுக்கு முன்னர் விண்ணப்பித்துள்ளீரா ? அப்படியாஞல் திகதிகளைத் தரவும் :————.

12. நற்சான்றிதழ்கள் தந்தோரின் பெயரும் பதவியும் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

13. நீதிமன்றத்தால் குற்றவியல் குற்றத்திற்காக தண்டிக்கப் பட்டிருந்தால் அக்குற்றத்திற்கான விபரத்தையும் அதற் கான தண்டனையையும் தருக :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்ட விபரங்கள் உண்மை யானவை, சரியானவை என இத்தால் சான்றிடுகின்றேன். நிய மனத்திற்குப் பின் இதில் உள்ளவை பிழையானவை, தவறானவை எனக் காணப்படின் நஷ்ட ஈடின்றி வேலை நீக்கஞ் செய்யப்படு வேன் என்றும், தெரிவுக்கு முன் காணப்படின் தகைமை இழப் பேன் என்றும் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

2-577—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

# பரீட்சைகளும், பரீட்சைப்பெறுபேறுகளும் பிறவும்

## ஆசிரியர்களுக்கான சித்திர உயர் பரீட்சை
### (வினைத்திறமைகாண் தடை).

1957 ஆம் ஆண்டின் II ஆவது பருவ அறிக்கையாக வெளிவந் துள்ள சம்பள முரண்பாடு ஆணைக்குழு அறிக்கையின் 77 ஆம் 242 ஆம் பந்திகளுக்கும் 1967 ஆம் ஆண்டின் சம்பள முரண் பாட்டுக் குழுவின் விதந்துரைகளுக்கும் இணங்க 1972 ஓகத்து மாதம் நடாத்தப்பட்ட ஆசிரியர்களுக்கான சித்திர-வினைத் திறமைகாண் தடை-உயர் பரீட்சையில் பின்வரும் ஆசிரியர்கள் பூரண சித்தி அடைந்துள்ளதுடன், அவர்தம் வினைத்திறமைகாண் தடையைத் தாண்டித் தகுதியேற்றப்படுதற்குரியவராவர். இவ் வாறு அன்னவரின் உயர்தகுதி செய்யப்படும் தினம் 72.08.16 ஆம் தேதியாகும்.

II ஆம் பகுதி எழுத்துமூலப் பரீட்சையில் மாத்திரம் சித்தி யெய்தியுள்ளவர்கள், பரீட்சையில் பூரண சித்தியெய்தும்பொருட்டு I ஆம் பகுதிச் செய்முறைப் பரீட்சையில் சித்தியடையவேண்டும்.

எழுத்துமூலச் செய்முறை ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தியெய்தியோரின் பெயர்கள்

| ஆசிரியர் பெயர் | சேவை புரிந்த பாடசாலை |
|---|---|
| 1. கஜநாயக, எச். | மா/டிக்வெல வடக்கு ம. வி. |
| 2. கலஹிற்றியாவ, ஆர். டபிள்யூ. | நு/கீர்த்தி பண்டார ம. வி. |
| 3. கமகே, கே. ஜே. | க/கிராகம இரசஞான கற்கைப் பயிற்சிக் கல்லூரி, பிலிமத்த லாவ |
| 4. குணவர்தன, ஏ. பீ. எம். டி. வாஸ் | க/கிராகம இரசஞான கற் கைப் பயிற்சிக் கல்லூரி, பிலி மத்தலாவ |
| 5. ஜயசிங்க, யூ. ஈ. | களு/அலுபோமுள்ள ம. வி. |
| 6. ஜயசிங்க, பீ. எஸ். எம். | க/கிராம இரசஞான கற்கைப் பயிற்சிக் கல்லூரி |
| 7. பெரோரா, யூ. எல். எச். ஈ. | கொ. வ./உதம்மிற்ற ம. வி, கொற்றுகொட |
| 8. பெரேரா, பி. எம். ஆர். எவ். | கொ. வ/நியூஸ்ரெட் பெண்கள் ம. வி, நீர்கொழும்பு |
| 9. பிரேம்பால, எல். ஜீ. | க/விக்ரமபாகு ம. ம. வி., கம் பளை |
| 10. பிரேமரத்ன, ஏ. எல். | க/கிராகம இரசஞான கற் கைப் பயிற்சிக் கல்லூரி, பிலி மத்தலாவ |
| 11. ரொட்ரிகோ, டபிள்யூ. ஏ. எல். சி. | கொ. வ./நிமல்மரிய பெண்கள் ம. வி., றுடெல்ல, ஜாஎல |
| 12. செல்லஹேவ, எஸ். | க/கிராகம இரசஞான கற் கைப் பயிற்சிக் கல்லூரி, பிலிமத்தலாவ |
| 13. சில்வா, ஏ. ஏ. றீ. | கொ. வ/கந்தானை ரே. க. பெண்கள் வித்தியாலயம் |
| 14. உல்லுவிசேவா, பீ. | மா/ தலல்ல ம. வி., கோற்றெ கொட |
| 15. வீரசிங்க, டபிள்யூ. ஏ. டபிள்யூ. | க/கிராம இரசஞான கற்கைப் பயிற்சிக் கல்லூரி, பிலிமத் தலாவ |
| 16. விஜெயசிங்க, ஏ. | அம்பாந்தோட்டை/ராசபக்ஷ ம. ம. வி, விரகற்றிய |
| **தமிழ் மொழி மூலம்** | |
| 17. தம்பிரத்னம், ரீ. | யா/இராமநாதன் வித்தியாலயம், சுன்னாகம் |
| **ஆங்கில மொழி மூலம்** | |
| 18. அழகரத்னம், ரீ. | கொ. வ./நல்லாயன் மடப் பாடசாலை, வத்தளை. |
| 19. அழகேந்திர, டீ. ஆர். | கொ. வ/நாலந்த பெண்கள் ம. ம. வி. மினுவாங்கொட |
| 20. அத்துக்கோரலே, ஏ. டீ. என். என். | கொ. வ./சாந்த, ஆண்-பெண் கள் ம. வி. வத்தளை. |
| 21. தர்மராஜா, எம். எஸ். | க/கிராம இரசஞான கற்கைப் பயிற்சிக் கல்லூரி, பிலிமத் தலாவ. |
| 22. பர்ஞந்து, ரீ. பி. எல். | கொ/மெதடிஸ் உயர்பாடசாலை மொறட்டுமுல்ல, மொறட்டுவ. |
| 23. மலெல்லகெதர, ஆர். பி. | க/கிராகம இரசஞான கற் கைப் பயிற்சிக் கல்லூரி, பிலி மத்தலாவ |
| 24. பெரேரா, ஏ. எஸ், | வ/வதுளை ம. வி. வதுளை |
| 25. பொன்வீர, ஆர். | கொ. வ/அர்ச். சபாஸ்தியான் பெண்கள் வித்தியாலயம், கந்தானை. |
| 26. சமரசேகர, டபிள்யூ. | க/அர்ச் ஸ்கொலொன்திக்க ம. வி. கண்டி. |
| 27. விக்ரமசிங்க, சீ. ஏ. | க/கிங்க்ஸ்வூட் வித்தியாலயம், கண்டி. |
| 28. விஜெயகுணரத்ன, கே. வி. டீ. எஸ். பி. | ஹோமாகம மாயாதுன்ன ம. வி. ஹன்வெல்ல. |
| 29. கந்தசாமி, என். எஸ். | யா/பலாலி ஆசிரியர் கலா சாலை, வசாவிளான் |
| 30. செல்வநாயகம், ரீ. | யா/பலாலி ஆசிரியர் கலா சாலை, வசாவிளான் |
| 31. கனகசபாபதி, எஸ். | யா/இந்து வித்தியாலயம், யாழ்ப்பாணம் |

எழுத்துமூலப் பரீட்சையில் மட்டும் சித்தியடைந்தவர்களின் பெயர்கள்

| ஆசிரியர் பெயர் | சேவை புரிந்த பாடசாலை |
|---|---|
| **சிங்கள மொழி மூலம்** | |
| 1. தயஸ். எம். ஏ. எஸ். | கொ. வ./யசோதராதேவி வித்தி யாலயம் |
| 2. பெரேரா, எம். கே. | ஹோ/சிறி சித்தார்த்த ம. வி., கலப்பலுவாவ, இராஜகிரிய |
| 3. பியதாச, வை. | கு/மீத்தன்வல ம. வி., மாவத்த கம |
| 4. இரத்னயக, ஆர். எம். எஸ். | க/கிராகம இரசஞான கற்கைப் பயிற்சிக் கல்லூரி, பிலிமத் தலாவ |
| 5. வீரநாயக, பீ. ஏ. வை. | கொ. வ/மத்மகல ம. வி., ருகம |
| **ஆங்கில மொழி மூலம்** | |
| 6. ராஜபக்ஷ, எல். ரீ. | கொ. வ/வத்தளை அர்ச். அந் தோனியார் ம. வி., வத்தளை |
| 7. விஜயநாயக, பீ. | அ/மகாபோதி வித்தியாலயம், அனுராதபுரம் |
| 8. சோமசுந்தரம், கே. | யா/இந்து வித்தியாலயம், யாழ்ப்பாணம். |

பிரேமதாச உடகம,
கல்வி அமைச்சின் செயலாளரும்
மகா வித்தியாதிபதியும்.

எண். பர். நி./3/1378,
பாடசாலை நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு-2,
1973, பெப்ருவரி.

2-581—15.02.73 ந் திகதிய வர்த்தமானி இல. 47

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை )குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினுல்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** .. | 5.1.73 | வெள்ளி .. | 27.12.72 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 12.1.73 | வெள்ளி .. | 3. 1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.1.73 | வெள்ளி .. | 10. 1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 26.1.73 | வெள்ளி .. | 17. 1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** .. | 2.2.73 | வெள்ளி .. | 24. 1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி .. | 31. 1.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் .. | 7. 2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி .. | 14. 2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| **மாச்சு** .. | 2.3.73 | வெள்ளி .. | 21. 2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி .. | 28. 2.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 16.3.72 | வெள்ளி .. | 7. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி .. | 14. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி .. | 21. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| **ஏப்பிறல்** .. | 6.4.73 | வெள்ளி .. | 28. 3.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் .. | 4. 4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் .. | 11. 4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி .. | 18. 4.73 | புதன் .. | ந.ப. 12.00 |

**எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆு ஓகத்து மீ 18 ந உ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.